# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 2** **May 2014**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 2

**அன்னை இலக்கியம்**

பார்வைகள் . . . . . . . . . . . . . . . 3

நல்லதோர் வீணை செய்து . . . . 55

**ஜீவியத்தின் ஓசை**

*ஆத்ம அசைவு*

*அளவில்லா*

*ஆனந்தம் தருவது*

*சரணாகதி*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

இம்மாதச் செய்தி

# மரண பயம் விலகினால் மரணம் விலகும்



அன்னை இலக்கியம்

# பார்வைகள்

சமர்ப்பணன்

## 1. தரங்கிணியின் பார்வை

இறைவனே எல்லாம். எனவே, என்றும், எங்கும், எதுவும், எவரும் பூரண நலமாகவே இருக்க முடியும், இருக்க வேண்டும். அதை அறியும்வகையில் என் பார்வை மாறவேண்டும்.

இது தினந்தோறும் தவறாமல் நான் மனதிற்குள் கூறும் பிரார்த்தனை. என்னை மறந்தாலும், இதை மறக்க மாட்டேன். அத்தைப்பிள்ளை கற்றுக் கொடுத்ததாயிற்றே! அவர் அல்லவா என் இறைவன்?

சற்று அசைந்தாலும் மற்றவர்மீது உரச நேரிடும் கூட்டத்தின் நடுவில் தனியாக உட்கார்ந்து கொண்டு பலவண்ணப் பூக்களாலும், விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பல வருடங்களாக நான் காதலித்து வரும் என் அத்தைப் பிள்ளைக்கு இன்று திருமண நிச்சயதார்த்தம்.

மணப்பெண் நானில்லை.

நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் நான் அத்தைக்கு உதவியாக, எடுபிடி வேலைகளெல்லாம் செய்து கொண்டிருக்கிறேன். 'போகாதே' என்று கோபத்தோடு அம்மா கூறியதை மீறி இங்கே வந்திருக்கிறேன்.

சாதாரணமான புடவையோடும், வெறுங்கழுத்தோடும் வந்த என்னை, அத்தை தன் பட்டுப் புடவையையும், வைர அட்டிகையையும் அணிந்து கொள்ளச் சொன்னார். பெண்வீட்டார் அத்தையின் குடும்பத்தாரைப் பற்றிப் பெருமையாக நினைக்க வேண்டாமா? இரவல் ஒளியில் பிரகாசிப்பதில் எனக்கு விருப்பமில்லை என்றாலும், அத்தை சந்தோஷப்படுவார், அதனால் அவர் சந்தோஷப்படுவார் என்பதால் அதையும் செய்தேன். அவர் தன்

கையால் ஒரு முழம் மல்லிகைச்சரம் தருவதற்கு ஈடாக எதையும் கூற முடியாது.

என்னைத் தவிர வந்திருப்பவர்கள் எல்லோருமே வசதியானவர்கள் என்று தோன்றியது. பெண்ணின் அப்பா சொந்தமாக பெரிய தொழிற்சாலை வைத்திருக்கிறாராம். பெண்ணை நான் இன்னமும் பார்க்கவில்லை. நான் பார்த்தால் என்ன, பார்க்காவிட்டால்தான் என்ன? அவருக்குப் பிடித்திருந்தால் அதுபோதும் எனக்கு, அவள் அதிர்ஷ்டக்காரித்தான். அவரை கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாளே! ஒரே பெண்ணாம். நல்ல அழகியாம். நவரத்தின நகை அலங்காரத்தில் மிகமிக அழகாக இருக்கிறாளாம். இருக்கட்டுமே.

இப்படியெல்லாம் அலங்காரம் செய்து கொண்டால், நான் கூடத்தான் அழகாக, இவளைவிடவும் அழகாக இருப்பேன். பல சிக்கல்களால் என் முகமும், உடலும் இப்போது கொஞ்சம் பொலிவு இழந்திருப்பது என்னவோ உண்மைதான். போன வருடம்வரைகூட தங்கச்சிலை என்றுதான் என்னைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். நான் வாராவாரம் பிள்ளையார் கோவிலுக்குப் போவதை கவனித்துவிட்டு ஊரிலிருந்த வாலிபர்களில் அவரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பிள்ளையார் பக்தர்களாகி விட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படி சொல்வதால் என்னை நாணமற்றுப் போனவள் என்று நினைத்து விடவேண்டாம். சராசரி மனிதர்களிடமிருந்து அவர் எவ்வளவு வேறுபட்டவர் என்பதை புரிய வைக்கத்தான் அப்படிச் சொன்னேன். அறிவிலிக்கு தான் அறிவிலி என்பது தெரியாது. அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருப்பான். ஆனால் அறிவாளிக்கு தான் அறிவாளி என்பதுவும், அழகிக்கு தான் அழகி என்பதுவும் தெரியாதா என்ன?

சபையில் சலசலப்பு ஏற்பட்டது. வாத்தியங்கள் உரத்து ஒலித்தன. மேடைக்குப் பக்கவாட்டில் இருந்த நீலக்கல்நிற கம்பளம் விரிக்கப்பட்டிருந்த படிகளில் பளபளக்கும் பட்டாடைகள் அணிந்திருந்த அவர், சூரியன் மெல்ல மெல்ல வானத்தில் உயர்ந்து கொண்டே போவது போல ஒவ்வொரு படியாக ஏறிக் கொண்டிருந்தார்.



வானத்தில் சூரியனின் உயரம் அதிகமானால் பிரகாசமும் அதிகமாகிறது. ஆனால் கூடவே அனலும் அதிகமாகி என்னைப் போன்ற மலர்கள் வாட வேண்டியதாகி விடுகிறது. பழைய மலர்கள் உதிர்வதால் யாருக்கும் ஒரு நஷ்டமும் இல்லை. இன்றோ, நாளையோ புதிய மலர்கள் இதழ்களை விரித்து புன்னகைத்து மணம் வீசத்தான் போகின்றன. சூரியன் ஒன்றே ஒன்றுதானே இருக்கிறது? அவன் இருண்டால் உலகம் என்னாவது? சூரியனே இருள்வதை விரும்பினாலும் அதை அனுமதிக்க முடியாது. கோடி மலர்கள் வாடினாலும் சூரியன் ஒருபோதும் பிரகாசிப்பதை நிறுத்தக் கூடாது.

இன்னும் சிறிது நேரத்தில், ஒரு முகூர்த்த நேரத்தில், இரண்டு நாழிகை நேரத்தில், நாற்பத்தியெட்டு நிமிட நேரத்தில் நான் மனதாலும் தொடக்கூடாத தூரத்திற்கு அவர் போய் விடுவார். மீண்டும் என்னிடம் திரும்பி வரவே முடியாத தூரம். ஆயிரகாத தூரத்திலிருந்து, பதினெட்டு வருடங்கள் கழிந்தபின்னும் மறவாமல் திரும்பி வர அவர் என்ன கண்ணனா? நான்தான் என்ன ராதையா?

மதுராவில் மாமன் கம்சனை சந்தித்து விட்டு துவாரகை செல்ல கண்ணனுக்கு அழைப்பு வந்துவிட்டது. புறப்பாட்டிற்கு முதல் நாளிரவு ராதையை யமுனை நதிக்கரையில் கண்ணன் சந்தித்தான். கண்கலங்கிய ராதையை கட்டியணைத்து, ‘ஆயிரம் கோபிகையர் என்னை காதலிக்கிறார்கள், தங்களை எனக்குத் தர பிரியப்படுகிறார்கள். ஆனால், நானோ உன்னை மட்டுமே முழுவதுமாக காதலிக்கிறேன். உன்னை சரணடையவே விரும்புகிறேன்’ என்றான் நீலவண்ணக் கண்ணன்.

எப்போதும் போல வார்த்தைகளால் தன் பெண்மையை சீண்டுகிறான் என்று பேசாதிருந்தாள் ராதை.

‘எங்கிருந்தாலும், எத்தனை காலம் கழிந்தாலும் என் கடமைகளை முடித்துவிட்டு உன்னைத் தேடி வருவேன். நான் திரும்பி வரும்வரை என் தாயையும், தந்தையையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்’ என்று கூறி விடைபெற்றான் கண்ணன். பதினெட்டு வருடங்கள் அவனை நினைத்துக் கொண்டு அவனிட்ட பணியை தான் பெற்ற பாக்கியமாக கருதி கடமையைச் செய்தாள் ராதை.

காலமும், கண்ணீரும் உருண்டோடின. குருஷேத்ரப் போர் முடிந்தது. சுற்றி இருப்பவர்களின் சுபாவத்தால் ஆன்மீக புருஷன் பாதிக்கப்பட வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட முடியாதவன் நிர்ணயித்த விதி. தானே தனக்கிட்ட ஆணையை மீறாமல் தன்னை அதற்கு உட்படுத்திக் கொள்வதே அவனது தீராலீலை. நலிவுற்ற உடலோடு ஆன்மீக புருஷன் பிருந்தாவனம் வந்தான். ராதையின் பாதங்களை தன் கைகளால் ஏந்தி, இதயத்தில் பதித்துக் கொண்டான்.

பெண் புகட்டிய பாதாமிர்தம் ஆணுக்கு புத்துயிரும், புத்துடலும் தந்தது. பிற உயிர்களின் இதயங்களை பூரிக்க வைத்த கண்ணனின் இதயம் அக்கணம்தான் முதன்முதலாக பொன்னொளியால் தீண்டப்பட்டு பூரித்து விரிந்தது. பொன்னுலகம் பிறந்தது. மண்ணுலகிலிருந்து பிரிக்க முடியாத அவ்வுலகில், சக்தி பேரலைகளாகப் பொங்கிப் பெருகிப் புரளும் ஆனந்தத் தரங்கிணி பாய்ந்தோடத் தொடங்கியது, ஒவ்வொரு மனித இதயத்திற்குள்ளும் அம்மகாநதி சிறு ஊற்றாக உருமாறியது, ஊற்றை நதியாக விரித்தாக்குவது அவரவர் விதி, அவரவர் விருப்பம்.

ஆண்மகனின் சரணாகதியை பெண்ணரசி ஏற்றபின் பிரித்து வைத்த பெருங்கல் சுவர் மணல் மேடாக மாறிச் சரிந்தது. நீரலையோடு நீரலை கூடியது போல அவர்களால் யுகயுகமாகப் பிரிவின்றி சேர்ந்திருக்க முடிகிறது.

ராதைக்கு இருந்த அறிவு எனக்கு இல்லாமல் போய்விட்டது.

மரத்துப்போன மனதோடு மரத்தூண் மீது சாய்ந்து மற்றொரு மரத்தூணாக நின்று கொண்டிருந்த என் கால்களின் அருகே அமர்ந்து அவர் 'என்னை மணந்து கொள்' என்று கெஞ்சிக் கேட்டபோது ஏதேதோ காரணங்களைக் கூறி 'முடியாது' என்று மறுத்தேனே! எளிதாகக் கிடைத்ததால் எட்டி உதைத்துவிட்டேன்.

அவரது கோரிக்கையை மறுக்க முடிந்த என்னால், காதல் நினைவுகளில் ஒன்றைக் கூட மறக்க முடியவில்லையே.

வீட்டில் யாருமில்லாத சில மாலை நேரங்களில், கிணற்றடியில் துணி துவைக்கும் மேடை மீது அவர் அமர்ந்திருப்பார். அவரருகே அமர்ந்து அவரது வலிமையான தோளில் லேசாக சாய்ந்து கொண்டிருப்பேன். அவர் வியாச மகாபாரதத்திலிருந்து கிளைக் கதைகளை சொல்லிக் கொண்டிருப்பார். மாலையிருளில் மேகங்களுக்கு நடுவே ஒளிந்திருந்து விஷமக்கார வெண்ணிலா அம்மாவைப் போல எங்களை கண்காணித்துக் கொண்டே இருக்கும். மரஅன்னையர் தலையசைத்து சம்மதம் தருந்தோறும் பூவாசம் வீசும் தென்றல் குழந்தை எங்களை தொட்டு விளையாடும். எங்கிருந்தோ பறவைகள் கீதமிசைக்கும்.



கண்ணனின் குழலோசையில் ராதை லயம் கொண்டாள் என்றால், நான் அவர் பின்னும் காவியக்கதைகளில், அவர் படைக்கும் கனவுலகங்களில் லயம் கொண்டிருப்பேன். அவர் கூறும் கதைகளில் வரும் நாயகியாக என்னையும், நாயகனாக அவரையும் கற்பனை செய்து கொண்டு ராதையாக, தமயந்தியாக, சந்திரமதியாக, சகுந்தலையாக முழு வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பேன். அவையெல்லாம் புகைபடிந்து சிதைந்து போன பழையபடங்களாக இருக்கவில்லை. என் கல்லிதயத்தில் வடிக்கப் பட்ட ஜீவசிற்பங்களாக இருக்கின்றன.

இனி நான் என்ன செய்யப் போகிறேன்?

பிரிவை விரும்பி வரமாகப் பெற்றுவிட்டு, இன்று அதற்காக வருந்தி என்ன ஆகப் போகிறது? வெளியிலிருந்து ஒளிபுக முடியாத கருங்குகைக்குள் நுழைந்து, என் எதிர்காலக் கதவுகளை சாத்திக் கொண்டுவிட்டேன். எந்த சாவி கொண்டு அந்தக் கதவுகளைத் திறப்பேன்?

யார் அந்த சாவியை எனக்குத் தருவார்கள்?

## ௨. தத்தாத்ரேயனின் பார்வை

எத்தனை முறை அணைக்க நினைத்தாலும், அணையாமல் ஆர்வத்தீ என்னுள் சுடர்விட்டு எரிகிறது. மகத்தானவற்றை சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தீயில் என்னிதயம் எப்போதும் பற்றி எரிந்து கொண்டே இருக்கிறது. சாதிக்க நினைப்பவற்றை பட்டியலிட்டுப் பார்த்தால் இதுதான் சாதனை, இதுதான் சாதனை

என்று ஒவ்வொன்றையும் ஏற்கத் தோன்றுகிறது. அதே பட்டியலை மீண்டும் பார்த்தால் இதுவல்ல சாதனை, இதுவல்ல சாதனை என்று ஒவ்வொன்றையும் விலக்கத் தோன்றுகிறது. என் கனவுலகை உயிர்த்துடிப்போடு வைத்திருக்கும் சிந்தனைகள் யதார்த்த உலகோடு இதுவரை பொருந்திப் போகவேயில்லை.

மனித இனம் உயரவேண்டுமானால் ஒன்று எவரும் மாறாத போதும் மகத்தான தனிமனிதனொருவன் புரட்சி செய்யவேண்டும். அல்லது பரிணாம மாற்றம் என்பார்களே அதுபோல ஒன்று நிகழ்ந்து மொத்த மனித இனமும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் முன்னேற வேண்டும்.

அன்றாட வாழ்வில் இரண்டுமே நிகழாத நிலையில் என்னைப் போன்ற சாதாரணமான தனியன் மனித இனத்தை மொத்தமாக உயர்த்த நினைப்பது நடக்கும் காரியமா?

இன்று எனக்கு மதுமதியோடு நிச்சயதார்த்தம். மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எல்லாம் சண்டப்பிரசண்டன் சந்துருவின் சகவாச தோஷம்தான். எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத காரியங்களை செய்வதையே தன் ஜென்ம தர்மமாகக் கொண்டவன். அப்படி ஒரு விபரீதமான காரியத்தைச் செய்து விட்டாலும், அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல், அடுத்த காரியத்தை உற்சாகமாக ஆரம்பித்து விடுவான்.

என் சுபாவத்திற்கு மாறான சுபாவம் கொண்ட அவனைப் போல என்னால் இருக்க முடியவில்லை.

பகலைப் படைத்த இயற்கை அதை முழுமை அடையவிடாமல், இரவை படைத்தது. எதிரானவை இரண்டும் கூடினால், முழுமையான நாள் பிறக்கும் என்று இயற்கை நினைக்கலாம். மனிதனோ இருளற்ற பகலை அல்லவா தேடிக் கொண்டிருக்கிறான்?

ஆண், பெண் என்ற முரண்களள்தானே வாழ்வை வற்றாத ஜீவகளையோடு வைத்திருக்கின்றன? ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள உறவு முரண்களற்றுப் போனால், இலக்கியம் உயிரற்றுப் போய்விடாதா? வடிவங்கள் மாறினாலும், முரண்களின் அடிப்படை மனிதன் தோன்றிய நாள் முதல் இன்றுவரை மாறாமல் அப்படியே இருக்கிறது.



இயற்கை தன் போக்கில் நின்று நிதானமாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எதிரானவற்றை ஆக்கியும், அழித்தும், முரண்களை இடைவிடாது மோதவிட்டும் எது சிறப்பானது என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கலாம். மனிதனால் அத்தனை நிதானமாக செயல்பட முடியுமா? எதுவும் உரிய நேரத்தில் விரைவாக நடக்க வேண்டாமா?

மனிதன் எளிதில் முழுமையை அடைந்து விடமுடியாத வகையில் அவனுக்கு எத்தனை எதிரான நிலைகளை வாழ்வு நிமிடத்திற்கு நிமிடம் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது! சிக்கல்களும், முரண்பாடுகளும் மட்டுமே என்னைச் சுற்றி இருக்கின்றன. இணக்கமான சூழ்நிலையும், ஒத்திசையும் மனிதர்களும் இல்லை. இருத்தலின் இன்னல்கள் இணக்கமின்மையின் பின்னல்கள்.

எத்தனையோ சிரமங்களுக்கு இடையே என்னை வளர்த்த அம்மா மங்களம், வசதியில்லாத காலத்தில் ஓரளவிற்கு வசதியோடு இருந்த மாமாவின் ஆதரவு எனக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். இன்று மாமாவின் குடும்பத்தைப்பற்றி நான் ஒரு வார்த்தை பேச முற்பட்டாலும் அதை அம்மா தடுக்கிறார்.

அன்று அத்தை கௌசல்யா எனக்கு ஒரு வேளை வயிறார உணவிட மனம் கசங்கினார். இன்று தன் ஒரே மகளை நான் மணக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

பல வருடங்கள் என்னை காதலித்த தரங்கிணி, சட்டென்று ஒரு நாள் ‘இந்தப் பிறவியில் நம் திருமணம் நடக்காது. என்னை மறந்து விடுங்கள்’ என்று கூறிவிட்டாள்.

செய்ய முடியும் என்று நான் சொல்பவற்றை நம்புவதற்கு என்னைத் தவிர எவருமில்லை.

நான் செய்ய நினைக்கும் காரியங்களுக்கு உலகத்தின் வளமனைத்தும் தேவைப்படுகிறது. நான் மாத வருமானம் வரும் வேலையில் இருக்கிறேன்.

இன்னும் எத்தனையோ முரண்கள். அவை ஆயாசத்தைத் தரலாம். முன்னேற்றத்தைத் தடுப்பதில்லை. முரண்களின் மோதல்கள் உயர்வின் ஊற்றுகால்கள் என்று அறிந்தவனின் முன்னேற்றத்தை முடக்கும் சக்தி இந்த உலகில் இருக்கிறதா என்ன?

அது புரிந்ததால்தான் முடிந்தவரை இணக்கத்தை உண்டாக்கி முன்னேறிக் கொண்டே இருக்கிறேன், எது கையில் இருக்கிறதோ அதைக் கொண்டுதான் இணக்கத்தை உருவாக்க வேண்டும். எங்கு நிற்கிறோமோ அங்கிருந்துதான் பயணத்தைத் துவக்க முடியும். பயணத்தை துவக்கி விட்டால், முடிவை அடையுமுன் நான் இடையில் நின்று விட மாட்டேன். அது நிச்சயம்.

'மாப்பிள்ளை, மேடைக்குப் போய் உட்காருங்கள்' என்று வாயாவி மாமா உற்சாகமாகக் கூறினார்.

சிறிதும் உற்சாகமின்றி மேடையை நோக்கி நடந்தேன். பலி-மேடையை நோக்கிச் செல்லும் ஆடாக என்னை உணர்ந்தேன். ஆட்டிற்கு தான் பலியாகப் போவது தெரியாது. ஆனால் எனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அம்மாவின் ஆசை, தேவையற்ற கடமை உணர்வு, பணத்தேவை, தரங்கிணியின் நிராகரிப்பு என்று ஏற்கனவே பல வெட்டுகத்திகள் என்னை பலி கொண்டுவிட்டன. இன்று மதுமதியும், அவள் குடும்பத்தினரும் வெட்டப் போகிறார்கள்.

மேடையின் பக்கவாட்டிலிருந்த கருநீலநிற கம்பளம் விரித்த படிகளில் ஒவ்வொன்றாக மெல்ல ஏறினேன். மனிதன் உயரே போகப் போக தனிமைதான் அவனுக்குத் துணை. உயரே இருக்கும் சூரியனின் அனலில் நிழலற்றுப் போனவர்கள் வாடலாம். ஆனால் ஒவ்வொரு வினாடியும் தன் அனலில், தான் இருந்தே ஆக வேண்டும் என்ற சூரியனது அவலநிலையைப்பற்றி யாரும் சிந்திப்பதே இல்லை.

எவரும் உயர்விற்கு உரிய விலையைத் தந்தே தீர வேண்டும்

மேடை ஏறும் போதே அவளைப் பார்த்துவிட்டேன்.

நூறாயிரம் நட்சத்திரங்கள் வானில் மின்னினாலும் மனிதனின் கண்களுக்கு நிலவுதான் தனியாகவும், தெளிவாகவும் தெரிகிறது. நட்சத்திரங்களைவிட நிலா சிறியதென்றாலும், மனிதனுடைய கண்களுக்கு அதுவே பெரியதாகத் தோன்றும்.

காதல் கடலில் குதித்து விட்டவனின் நிலையும் அதுதான். அலங்கரிக்கப்பட்ட சிலைகளென மின்னும் ஆயிரம் இளவரசிகள் கூடியிருக்கும் சபையிலும் தன் இதயவானில் ஒளிவீசும் சாதாரணப் பணிமகளை கணப்பொழுதில் காதலனால் கண்டு கொள்ள முடியும்.



வேண்டாம் என்று என்னை உதறித் தள்ளிவிட்டவள் ஏனிப்படி என்னெதிரே பட்டுப்புடவையும், வைர அட்டிகையும் அணிந்து கொண்டு மணப்பெண் போல உட்கார்ந்து இருக்கிறாள்? மறுத்தது தானென்பதை மறந்து 'என்னை ஏன் கைவிட்டாய்' என்று கண்களால் கேள்வி கேட்கிறாள்.

கானகத்தில் கண்டு காந்தர்வ மணம் கொண்டபின், சகுந்தலையிடம் 'கூடிய விரைவில் திரும்பி வருவேன்' என்று கூறிப் பிரிந்த மன்னன் துஷ்யந்தன் அவளை மறந்தான். அவள் காத்திருந்து பின் தன்னைத் தேடிவந்தபோது 'உன்னைப் பார்த்ததே இல்லை' என்று சபை நடுவில் கூறினான். இன்னொருவனுக்காக தான் சிறையெடுத்து வந்த அம்பை, எல்லோராலும் நிராகரிக்கப்-பட்டு கதியற்றவளான பின்னும், 'உன்னை நான் மணக்க முடியாது' என்று சபை நடுவில் கூறினார் பீஷ்மர். அணைக்க வந்த பெண்மையை அறப்பிழை செய்து நிராகரித்து சிறுமைப்-படுத்திய இம்மாவீரர்களிடம் சுட்டெரிக்கும் கேள்விகளை அப்பெண்கள் கேட்டது மிகவும் பொருத்தமானதுதான்.

ஆனால் அணைக்க வந்த என்னை அன்று நிராகரித்து விட்டு, இப்போது கண்களில் பொருத்தமில்லாத கேள்விகளோடு மௌன-மாக சபையில் உட்கார்ந்திருக்கிறாள் தரங்கிணி.

இவள் எப்போதுமே வித்தியாசமானவள்தான்.

## 3. மங்களத்தின் பார்வை

எல்லாமே நிறைவாக இருக்கிறது. அன்று தத்தாவை வயிற்றில் சுமந்தபோது என் பெண்மை நிறைந்தது. இன்று பெரிய மனிதர்களின் சபையிலிருக்கும் மேடை அவனை சுமப்பதைப் பார்க்கும்போது என் தாய்மை நிறைகிறது. தத்தா! நான் பெற்ற பிள்ளை, நான் வளர்த்த பிள்ளை, நான் ஆளாக்கிய பிள்ளை. பெருமையாக இருக்கிறது.

தத்தா பட்டு வேட்டி, சட்டையில் அழகாக இருக்கிறான். கோட்டும், சூட்டும் போட்டிருந்தால் வெள்ளைக்கார துரைபோல இன்னும் அழகாக, மிடுக்காக இருந்திருப்பான். அப்படி எதுவும் நடந்து விடாமலிருக்கத்தான் ரோஜா கூடவே இருக்கும் முள்ளைப் போல, தத்தா கூட குத்துவதற்கென்றே சந்துரு இருக்கிறானே! சூட்டு தைத்துக் கொள்ள தயாராக இருந்த தத்தா, 'அடுத்த பிறவியிலாவது ஒரே ஒரு நாளாவது இந்தியனாக இருக்க முயற்சி செய்' என்று சந்துரு விஷமமாகக் கூறியதும், மனதை மாற்றிக் கொண்டு விட்டான்.

சந்துருவோடு தத்தா பழக ஆரம்பித்தபோது எனக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது. 'தத்தா ஆதரவில்லாத குழந்தை. சந்துருவைப் போன்ற கொஞ்சம் படித்த, நல்ல குடும்பத்து பையன்களோடு சேர்ந்தால் நல்லது. வசதி வாய்ப்புகள் எங்கிருந்தாலும் இப்படிப்பட்ட பையன்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே' என்று நினைத்தேன். தத்தாகூட பழகிய இன்னொரு பையன் பவித்ரன் படபடவென்று ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்கும் போதெல்லாம், தத்தாவும் இதுபோல பேசவேண்டும், அறிவாளி ஆகவேண்டும் என்று பிரியப்பட்டேன்.

ஆனால், சில மாதங்களிலேயே பையன்களின் போக்கைப் பார்த்து எனக்கு பயம் உண்டாகி விட்டது. என் பிள்ளை மற்ற பிள்ளைகளைப் போலில்லை. மிகவும் அப்பாவி.

ஆன்மீக ஆர்வம் இருந்தால் கோவிலுக்குப் போகலாம். சாயங்காலங்களில் விளக்கேற்றி விபூதியோ, திருமண்ணோ அணிந்து கொண்டு, ஒரு பதிகமோ, பாசுரமோ அழகாக வாய்விட்டு பாடலாம். அது போதாதா?

சந்துரு ஆன்மீக மகான்கள் என்று நினைத்துக் கொண்டு பிச்சைக்காரர்களோடும், குப்பை பொறுக்குபவர்களோடும், ஆண்டிப் பண்டாரங்களோடும் பழகி அவர்கள் உளறுவதில் அர்த்தம் கண்டுபிடித்துக் கொண்டிருப்பான். ஆண்டி ஒருவர் ரமண மகரிஷியைப் பார்த்தாராம். அவர் 'சும்மா இரு. சுகம் வரும்' என்றாராம். ஆண்டி சும்மா இருக்க அறுபது வருடங்களாக முயற்சி செய்தும் முடியவில்லையாம். ஆண்டி சொன்னதைக் கேட்டுவிட்டு சந்துரு ஒரு வாரம் முயன்றானாம். ஒரு நிமிடம் கூட சும்மா இருக்க முடியவில்லையாம். என்ன பேத்தல் இது.



என் மனம் நிறையுமளவிற்கு பணம் கிடைத்தால் நான் வாழ்நாள் முழுவதும் சும்மா இருப்பேனே.

நல்ல குடும்பத்தில் பிறந்தவனுக்கு இதெல்லாம் தேவைதானா? சந்துரு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அது அவனைப் பெற்றவர்களின் பிரச்சனை. அவன் போகும் ஆபத்தான இடங்களுக்கெல்லாம் தத்தாவையும் கூட்டிக் கொண்டு போனதுதான் எனக்குப் பிரச்சனையாகிவிட்டது.

அதிலும் பிள்ளைகள் அபிராமி பித்தர் என்ற ஒரு போலி சாமியாரிடம் பழக ஆரம்பித்தபின் என்னால் நிம்மதியாக ஒரு மணிநேரம் கூடத் தூங்க முடிந்ததே இல்லை. அபிராமி பித்தருடன் பழகி என் ஒரே மகனான தத்தா துறவி ஆகிவிடுவானோ என்று எத்தனை பயந்தேன். அப்படி நடந்து விட்டால் என் நிலைமை என்னவாகும்? நான் பயந்தபடியே ஒருநாள் அபிராமி பித்தர் தத்தாவையும், சந்துருவையும் துறவிகளாக மாறச் சொன்னார். சந்துருவிற்கு திடார், திடாரென எப்போதாவது நல்ல புத்தி வரும். அப்படி ஒரு நல்ல புத்தி அந்த நேரம் பார்த்து வர 'துறவறமெல்லாம் சரிப்பட்டு வராது' என்று கறாராகச் சொல்லிவிட்டான். அந்த ஒரே காரணத்தால்தான் தத்தாவை ஆன்மீக இடங்களுக்கு அழைத்து சென்ற சந்துருவின் தவறுகளை எல்லாம் மன்னித்துவிட்டேன்.

வேறு வழியில்லாமல் மன்னிப்பது, பொறுத்துக் கொள்வது, பணிந்து நடப்பது என்பதெல்லாம் நான் கேட்காமலே வறுமை எனக்குத் தந்த வரங்கள்.

'பசித்திருப்பவனுக்கு முதலில் உணவூட்ட வேண்டும். ஆன்மீகப் பேச்செல்லாம் அதற்கப்புறம்தான்' என்று சுவாமி விவேகானந்தர் ஒருமுறை சொன்னாராம். நான் நினைப்பதை அப்படியே சொன்ன அவரல்லவா உண்மையான மகான். ஐம்புலன்களையும் ஆட்சி செய்வது பசி; ஆன்மீகமோ, அரசாங்கமோ இல்லை. தான் பசித்திருக்கும்போது, தன் குழந்தையும் பசியால் அழுவதை பார்க்கும் நிலை வந்தால் தெரியும் ஆன்மீகவாதிகளின் சுயரூபம். பெரிய ஆச்சாரியரான துரோணர் தன் பிள்ளை அசுவத்தாமனின் பசியைக் கண்டு துடித்ததால்தானே பாஞ்சாலத்தை அழித்தார்? திரௌபதி பிறந்து, பாரதப்போர் நடக்க காரணமானார்?

ஆன்மீகவாதிகளால் குடும்பத்தை அழிக்கத்தான் முடியும். அல்லது யாராவது வசதி ஏற்படுத்தித் தந்தால் நடைமுறைக்கு உதவாத தத்துவத்தை நீட்டி முழக்கி பேசிக் கொண்டிருக்க முடியும். பைசாவிற்குப் பிரயோசனமில்லாதவர்கள். இவர்களோடு பழகியதால்தானே தத்தாவின் அப்பாவிற்கு எதன் மீதும் பிடிப்பில்லாமல் போயிற்று? நாங்கள் பட்ட சிரமமெல்லாம் இவர்களால் வந்ததுதானே?

பரம்பரை பழக்கத்தின் காரணமாக ஏதாவது ஒரு நல்ல நாளில் ஆன்மீகவாதியிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டாலும், பதிலுக்கு காணிக்கைக் கொடுத்து கணக்கை நேர் பண்ணிவிடுகிறோமே. அப்புறமென்ன? நல்லது நடந்துவிட்டால் இவர்களது ஆசிர்வாதத்தால் நடந்தது என்று பெருமை அடித்துக் கொள்கிறார்கள். கெட்டது நடந்துவிட்டால் உன் கர்மம், உன் விதி, உன் குணக்கேடு என்று சொல்லி பொறுப்பிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்கிறார்கள்.

ஆன்மீகவாதி உலகில் இல்லாமல் போனாலும் குடும்பஸ்தனால் சந்தோஷமாக வாழ முடியும். குடும்பஸ்தன் இல்லையென்றால் துறவிகளால் வாழ முடியுமா? குடும்பஸ்தன் சோறு போடுவான் என்ற தைரியத்தில்தான் ஒருவன் துறவி ஆகிறான். பசியெடுத்தால் குடும்பஸ்தனிடம்தான் ஆன்மீகவாதி கையேந்த வேண்டியிருக்கிறது.

பணமிருந்ததால்தான் ஜனக ராஜாவை ராஜரிஷி என்று உலகம் கொண்டாடுகிறது. ஒன்றுமில்லாதவனால் எதைத் துறக்க முடியும்? நிறைவேறாது என்று தெரிந்து கொண்டதால் ஆசைகளைத் துறக்கலாம். பாவம் அவனால் வேறென்ன செய்ய முடியும்.

அறிவாளியான வெள்ளைக்காரன் செவ்வாய் கிரகத்திற்கு ராக்கெட் அனுப்புகிறானாம். எப்பேர்ப்பட்ட சாதனை! நம்மூரில் அகத்திற்குள் போகிறேன், சமாதி நிலையை அடைகிறேன் என்று பேசுகிறார்களே. என்ன அபத்தம் இது! அறிவியல் சாதனைக்கு ஆதாரம் தர முடியும். ஆன்மீகவாதிகளால் தங்கள் சாதனைக்கு என்ன ஆதாரம் தர முடியும்? எதையுமே ஆதாரத்தோடு நிரூபிக்காமல் சாதனை செய்து விட்டதாகப் பேசுகிறார்கள். கொஞ்சமாவது நம்ப முடிகிறதா? சோம்பேறியாக தூங்க வேண்டுமானால், அதை



வெளிப்படையாகச் சொல்லிவிட்டு செய்யலாமே. தியானம் செய்கிறேன் என்று ஏன் பொய் சொல்ல வேண்டும்?

‘கண்களிருப்பது பார்க்க. காதுகளிருப்பது கேட்க. மூக்கிருப்பது முகர. கைகளிருப்பது தொட. நாக்கிருப்பது சுவைக்க. இந்த ஐந்து புலன்கள் சொல்வதுதான் உண்மை. வேறெதுவும் உண்மை இல்லை. புலன்களுக்கு புரியாத எதையும் மனிதன் நம்ப வேண்டியதில்லை’ என்று பகுத்தறிவு சார் எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பார்.

நான் அதிகம் படிக்காத ஒரு சாதாரணமான பெண்தான். தப்போ, சரியோ ஏதோ ஒன்றை சொந்தமாக யோசித்து, அறிவிற்குப் பொருத்தமான வகையில் முடிவெடுக்க முடிகிறது என்றால், அதற்கு காரணம் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் விஞ்ஞான வாத்தியார்தான். அவரை பகுத்தறிவு சார் என்று எல்லோரும் சொல்லிச் சொல்லி அவருடைய உண்மையான பெயர் என்னவென்று யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. சரியான பகுத்தறிவுவாதி. ஆனால், கோவில் சிலைகளை விஷயம் தெரியாமல் உடைக்கும் வகையறா இல்லை. எதையும் தெளிவாக என் அறிவுக்கு புரிகிற மாதிரி அடுக்கு மொழியில் எதுகை மோனையோடு, அழகாக விளக்குவார். அவர் சொல்லித்தான் எனக்கு ‘அறிவை நம்பு, ஆன்மீகத்தை நம்பாதே’ என்பதில் உள்ள உண்மை புரிந்தது.

அவர் சொல்வதில் எது தவறு, எது சரி என்று கண்டு கொள்ளுமளவிற்கு என்னிடம் விஷயஞானம் இல்லை. ஆனால் பகுத்தறிவு சார் செய்த உதவிகளை மறக்க முடியுமா? அவர் சொல்லித்தான் தத்தா ஆடிட்டருக்கு எப்படி படிப்பது என்று தெரிந்து கொண்டோம். பகுத்தறிவு புத்தகம் மட்டுமில்லை, உபநிஷதம்கூட படித்திருக்கிறார். எல்லோரிடமும் பிரியமாகப் பழகுவார். ஆனால், பிராமணர்களை மட்டும் அவருக்குப் பிடிக்காது. எங்கு, எந்த தவறு நடந்தாலும் பார்ப்பன சதி என்று சொல்வார். பெரிய புயல் ஒன்று வந்தபோது, அதன் பின்னணியில் நிச்சயம் பார்ப்பன சதி இருக்கிறது என்று சொன்னார். அது கொஞ்சம் மிகையான கற்பனை என்றுதான் எனக்குத் தோன்றியது.

‘அக்கா, பொருள் எவ்வளவு முக்கியம் என்பது பார்ப்பனனுக்கே தெரிந்திருக்கிறது. ஜடமும், பொருளும் ஆன்மாவின் ஆடை என்று முன்காலத்திலேயே சொல்லி இருக்கிறான். என்ன அர்த்தம்? ஆடையில்லாதவன் மானங்கெட்டுப் போன அரைமனிதன். அதுபோல பொருளில்லாதவன் மானத்தோடு வாழ முடியாத அரைமனிதன். அதுதான் அர்த்தம்’ என்று எளிமையாக எல்லோருக்கும் புரிகிற மாதிரி விளக்குவார்.

‘முண்டக உபநிஷதத்திலே பாதப்யாம் பிரித்வி என்று சொல்கிறான். உங்களுக்கெல்லாம் வஞ்சகரின் வடமொழி புரியாது. அர்த்தம் என்ன என்று நான் சொல்கிறேன். பூமி மேல்தான் பார்ப்பன கடவுளின் கால் நிற்கிறதாம். பூமி இல்லை என்றால் பார்ப்பன கடவுளே கீழே விழுந்துவிடுவானாம். பார்ப்பனன் சொல்வது பாதி பொய், பாதி உண்மை. கடவுள் என்று யாருமே இல்லை. அவன் சொல்லும் கடவுள் பொய். ஆனால் பொருள் மெய். பொருள்தான் முக்கியம். பொருள் என்றால் ஜடம். ஜடம் என்றால் நிலம். பணம் சேர்த்து காலாகாலத்தில் நிலம் வாங்குங்கள். அதன்மேல் நம் கால்கள் நிற்க வேண்டும். நிலம்தான் நமக்கெல்லாம் கடவுள். பணம்தான் நம் ஆன்மா. அது இருந்தால் ஆன்மீகவாதி நம்முன்னால் கைகட்டி நிற்பான்’ என்று அடித்துப் பேசுவார்.

அப்பேர்ப்பட்ட மேதையிடம் ஒருமுறை அதிகப்பிரசங்கி சந்துரு ‘உபநிஷத வாக்கியங்களை தவறாக அர்த்தம் பண்ணக் கூடாது’ என்று ஏறுக்குமாறாக விளக்கம் தந்து விதண்டாவாதம் செய்தான். ஆனாலும் சார் ‘போகட்டும் சின்ன பையன்’ என்று பதில் பேசாமல் மன்னித்து விட்டார்.

‘வேதகால வேள்விகளில் எதையெதையோ அவியாக இடுவார்களாம். அந்த மாதிரியான வேள்வியில் வேதங்களையும், உபநிஷதங்களையும் அவியாகப் போட்டுவிட்டால் என் ஆத்மா சாந்தி அடையும்’ என்று அடிக்கடி பகுத்தறிவு சார் சொல்வார்.

மங்களமக்கா என்று என்னை பாசத்தோடு கூப்பிடுவார். வரி கட்டுவது, சாமான் வாங்குவது என்று நான் எந்த வேலை சொன்னாலும் உடனே செய்வார். மிகவும் நல்லவர்.

பணம், வேலை, மரியாதை — இவைதான் வாழ்க்கைக்குத் தேவை. இவை வேண்டாம் என்று கூறும் எதுவும் எனக்கோ, என்



குடும்பத்திற்கோ தேவையில்லை. அனுபவத்தில் நான் அறிந்து கொண்ட உண்மையை நன்றாக மனதில் இருத்திக் கொண்டால், நான் பட்ட சிரமங்களை யாரும் பட வேண்டியிருக்காது.

நானும் வசதியான குடும்பத்தில் பிறந்து ராஜகுமாரி மாதிரிதான் வளர்ந்தேன். வசதியான குடும்பத்தில்தான் வாழ்க்கைப்பட்டேன். உலகமே என்னிடம் அன்பாகப் பழகியது. பணமிருந்ததால்தான் பிரியமாகப் பழகினார்கள் என்று எனக்குப் புரியாமல் போய்விட்டது. அவ்வளவு அப்பாவி நான். பணமிழந்து வறுமை வந்தபின்புதான் மனித குணத்தைப் பற்றி தெரிந்து கொண்டேன். பணம் எவ்வளவு முக்கியம் என்பதையும் புரிந்து கொண்டேன்.

தத்தா பாவம் வறுமையில்தான் வளர்ந்தான். நன்றாகப் படிப்பான். ஆடிட்டராகிவிட்டால், ஏராளமாக சம்பாதிக்க முடியும் என்று பகுத்தறிவு சார் மூலம் தெரிந்து கொண்டான். ஆனால், அந்த படிப்பை கிராமத்தில் இருந்து கொண்டு படிக்க முடியாது, சென்னைக்குப் போக வேண்டும் என்றான்.

என் அண்ணா சென்னையில் நல்ல நிலைமையில் இருந்தார். அவர் வீட்டில் இருந்து கொண்டு படிக்கட்டும் என்று முடிவு செய்தேன். இரண்டு, மூன்று வருடங்கள்தானே.

ஆனால், அண்ணி என்ற பெயரில் அரக்கி இருந்தாளே. அவள் என் பிள்ளையை எவ்வளவு கேவலமாக நடத்தினாள் தெரியுமா? வேறு வழியில்லாமல் தத்தா படித்து முடிக்கும்வரை எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். அவளுடைய அதிகாரமெல்லாம் அண்ணாவிற்கு நஷ்டம் வந்ததும் அடங்கி விட்டது. தத்தா லட்சக்கணக்கில் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் வெட்கமில்லாமல் என் வீட்டுப் படியேறி வந்து தன் பெண்ணை தத்தாவிற்கு கல்யாணம் பண்ண வேண்டும் என்று கேட்டாள். அன்றுதான் நான் யாரென்று அவளுக்குப் புரிய வைத்தேன். இந்த ஜென்மத்தில் இனி என்னிடம் அதிகப்பிரசங்கத்தனம் செய்ய மாட்டாள்.

இருந்தாலும் எனக்கு சூது, வாது தெரியாது. எல்லோரையும் மன்னித்து விடுவேன். அதனால்தான் தத்தாவிற்கு நல்ல இடமாக அமைந்ததும், எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல், நிகழ்ச்சிக்கு வரச் சொல்லி ஒரு கடிதம் எழுதினேன்.

அண்ணாவும், அண்ணியும் வரவில்லை. தரங்கிணிதான் பழைய புடவையை சுற்றிக் கொண்டு, வெறுங்கழுத்தோடு பித்தி போல வந்து சேர்ந்தாள். என்ன இருந்தாலும் நம் வீட்டுப் பெண்ணாயிற்றே, அவள் மரியாதை கெட்டுப் போய்விடக் கூடாதே என்று பெருந்தன்மையோடு, என் புது பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டு, வைர அட்டிகையையும் போட்டுக் கொள்ளச் சொன்னேன். லட்சணமாக இருக்கிறாள். மற்றவர்களிடம், முக்கியமாக சம்பந்தி வீட்டாரிடம், அண்ணா பெண் என்று தைரியமாக அறிமுகம் செய்ய முடிந்தது, நல்ல பெண்தான். சொன்ன வேலைகளை முகம் சுளிக்காமல் சிரித்த முகத்தோடு செய்கிறாள். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கட்டும்.

அபிராமி பித்தர் நிச்சயதார்த்தத்திற்கு வந்திருக்கிறார். வேண்டாதவர் என்றாலும் படியேறி வந்துவிட்டார் என்பதால், நல்லபடியாகப் பேசி வாயாவிமாமா பக்கத்தில் வசதியாக உட்கார வைத்தேன்.

பல வருடங்கள் குருகுல வாசம் செய்து இந்திரஜாலம், மந்திரஜாலம் கற்று அற்புதங்களை செய்பவர்களை மாயாவி என்பார்கள். இவை எதுவுமே தெரியாமல் சுயம்புவாக கற்ற வாய்ஜாலம் கொண்டு அற்புதங்களை செய்வதால் மாமாவிற்கு வாயாவி என்ற பொருத்தமான காரணப்பெயர் நிலைத்துவிட்டது. அபிராமி பித்தரின் வித்தை மாமாவிடம் செல்லுபடி ஆகுமா?

பகுத்தறிவு சாரிடமும் ‘பித்தருக்கு நல்ல புத்திமதி சொல்லுங்கள். குடும்பத்தைக் கலைப்பதுவும், குருவிக் கூட்டை கலைப்பதுவும் பாவம் என்று புரிய வையுங்கள்’ என்று குரலைத் தாழ்த்தி கேட்டுக் கொண்டேன். ‘பகுத்தறிவு என்றால் என்ன என்று கள்ள பார்ப்பனனுக்கு நான் புரிய வைக்கிறேன்’ என்று உற்சாகமாக கூறிவிட்டு பித்தர் பக்கத்தில் பகுத்தறிவு சார் உட்கார்ந்து கொண்டு விட்டார்.

என்ன நடக்குமோ, பார்க்கலாம்.



## 4. பகுத்தறிவு சாரின் பார்வை

இந்தியாவும், இந்தியரும் இன்னமும் முன்னேறாமல் இருப்பது பார்ப்பனரின் சதியால்தான். இதை என்னைப் போன்ற பகுத்தறிவுவாதிகளால்தான் துல்லியமான புள்ளி விவரங்களை அள்ளித் தந்து தெள்ளத் தெளிவாக நிரூபிக்க முடியும். புரியாத மொழியில் பக்திப் பாட்டு பாடினால், பயந்துவிட நான் பாமரனல்ல. எதற்கும் அஞ்சாத பகுத்தறிவு சிங்கம்.

இந்தியாவை அன்னியருக்குக் காட்டிக் கொடுத்த முதல் துரோகி பார்ப்பனன்தான். ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன்னால் உமையத் காலீபா என்கிற இஸ்லாமிய தேசத்து மன்னன் இரண்டு முறைகள் இந்தியாவிற்குள் ஊடுருவப் பார்த்தான். முடியவில்லை. மூன்றாவது முறை முகமது பின் காசிமை அனுப்பி வைத்தான். இந்தியாவின் நுழைவாயிலான தேபுல் நகரைச் சேர்ந்த பிராமணன் காசிமிடம் பேரம் பேசி, தேபுலின் ரகசியங்களை வெளிப்படுத்தி துரோகம் செய்தான். அதனால்தான் இந்தியா இஸ்லாமியரிடம் அடிமைப்பட நேர்ந்தது.

விலைவாசி உயர்வு, பாகிஸ்தான் பிரச்சனை, வேலையில்லா திண்டாட்டம் எல்லாவற்றிற்கும் பார்ப்பனன்தான் காரணம்.

பார்ப்பனனுக்கு போர் செய்யும் பலம் கிடையாது. புரியாத பாஷையில் கடவுளைப் பற்றி சொல்லி தந்திரமாக பலசாலிகளோடு கூட்டு வைத்துக் கொண்டு நம்மைப் போன்ற அப்பாவிகளை சுரண்டுகிறான்.

அதை மக்களுக்கு உணர்த்துவதுதான் பகுத்தறிவாளனின் பணி.

துரோகிகளின் வாயை மூட வேண்டும் என்பதற்காகவே, அவர்களின் பொய் மூட்டைகளான வேதங்களையும், உபநிஷதங்களையும் சமஸ்கிருதத்திலேயே படித்து, என் அறிவால் புரிந்துக் கொண்டிருக்கிறேன். எதிர்தரப்பு என்ன சொல்கிறது என்பதை தெரிந்து கொண்டுதான் தெளிவாகப் பேசுகிறேன். ஏ! கோழை பார்ப்பனனே, உன் எதிர்தரப்பு என்ன சொல்கிறது என்று தெரிந்து கொள். அப்போதுதான் உன்னால் அறியாமையிலிருந்து வெளிவர முடியும்.

‘என்ன இது, பகுத்தறிவு சார் இப்படி அதிரடியாகப் பேசுகிறாரே!’ என்று ஆச்சரியமாக இருக்கிறதா?

முப்பது வருடங்களுக்கு முன்னால் நான் பேசிய மேடைப் பேச்சின் ஒரு பகுதி இது. முதல் காதல், முதலிரவு, முதல் விழிப்புணர்வு போல, முதல் மேடைப்பேச்சையும் மனிதனால் மறக்க முடியாது.

அப்போது நான் படிப்பை முடித்துவிட்டு வேலையில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். உள்ளூர் பள்ளியில் ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். அறிவியல் பாடங்களில் நல்ல மதிப்பெண்கள் வாங்கி இருந்தேன். நேர்காணல் நடத்திய தலைமை ஆசிரியர் பிராமணர். அவர் மனதைக் கவருவதற்காக அவரிடம் எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் பேசினேன். பார்த்தசாரதி அய்யங்கார் இங்கிலாந்தில் படித்து பட்டம் பெற்றவர். சேவை மனப்பான்மையோடு கிராமத்து பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிறார் என்பது எனக்கு எப்படி தெரியும்? ‘இவ்வளவு மோசமாக ஆங்கிலம் பேசுபவரை இப்போதுதான் பார்க்கிறேன். உங்களுக்கு வேலை தருவது பகவானுக்கு செய்யும் துரோகம்’ என்று சொல்லி, என் மனதைப் புண்படுத்தி திருப்பி அனுப்பி விட்டார்.

‘என் ஆங்கிலம்பற்றி அவர் சொன்னது உண்மை’ என்பதை அந்த நிமிடமே என் அறிவு உணர்ந்து ஏற்றுக் கொண்டது. திரும்பும் வழியில் சாப்பிடுவதற்காக திரட்டி வைத்திருந்த சொற்ப சொத்து முழுவதையும் செலவழித்து, ‘முப்பதே நாட்களில் பிழையின்றி ஆங்கிலத்தில் பேசுவது எப்படி? என்ற புத்தகத்தை வாங்கினேன். ஆனால், அவமானம் உருவாக்கிய ஆத்திரம் அதிகமாகி, உணர்ச்சி அறிவை அடக்கியது.

அறிவு உணர்ச்சியைவிட உயர்ந்தது என்றாலும், உணர்ச்சி-தானே எப்போதுமே மனிதனை வழி நடத்துகிறது? எதிர்ப்பவன் வேலைக்காரன் என்றால் வீட்டைவிட்டு வெளியே அனுப்பலாம். சொந்தப் பிள்ளையே அடாவடித்தனம் செய்தால், பெற்றவருக்கு தோல்வியை ஏற்பதைத் தவிர வேறென்ன வழி இருக்கிறது? திருதராஷ்டிரன் துரியோதனனை ஏற்றது போல, அறிவு உணர்ச்சியை ஏற்பது மனிதனின் பலவீனம். ஆனால், பலவீனம்



பலத்தை பெற்றெடுக்கும் தாயாகவும் இருப்பதை என் அனுபவத்தில் எத்தனையோ முறை பார்த்துவிட்டேன்.

புத்தகம் வாங்கிக் கொண்டு நான் ஆத்திரத்தோடு திரும்பி வந்த வழியில், ஒரு சிறிய பகுத்தறிவு பொதுக்கூட்டம் என் நண்பன் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. அவன் பெயர் இப்போது சட்டென்று நினைவிற்கு வரவில்லை. என்னைப் பார்த்தவுடன் மேடைக்குக் கூப்பிட்டான். எதற்குக் கூப்பிடுகிறான் என்று தெரியாமலேயே அவனருகே சென்றேன்.

‘நெருப்பு நடேசன் இப்போது பகுத்தறிவுபற்றி கர்ஜிப்பார்’ என்று ஒலிபெருக்கியில் சொன்னான்.

‘நான் வெறும் நடேசன்’ என்றேன்.

‘இன்றிலிருந்து நீ நெருப்பு நடேசன்தான். பிரபலம் ஆகவேண்டுமானால் அடைமொழி அவசியம் தேவை’ என்றான்.

‘மேடையில் பேசிப் பழக்கமில்லை’ என்றேன்.

‘பழகிக் கொள்’ என்றான்.

‘நான் என்ன பேசுவது? பகுத்தறிவு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே’ என்றேன்.

‘பார்ப்பனனை திட்டு, அதுதான் பகுத்தறிவு’ என்றான் நண்பன்.

அக்கணத்தில் என் முன்னிருந்த கூட்டம் மறைந்து, என்னை அவமானப்படுத்திய பார்த்தசாரதி அய்யங்காரே எங்குமிருந்தார். என்னை மறந்தேன். எங்கிருந்தோ சொற்பிரவாகம் உருவாகி என் வாய் வழியே வெளிப்பட ஆரம்பித்தது. கூட்டம் ஆரவாரம் செய்து பாராட்டியது. என்னோடு அறிமுகம் செய்து கொள்ள பலர் ஆர்வம் காட்டினர். வேதம், சமஸ்கிருதம் எதுவும் எனக்குத் தெரியாது என்பது கூட்டத்திற்குத் தெரியாது. பொருளற்ற வெறும் வார்த்தைகளின் பலத்தைக் கொண்டு சிந்திக்கும் திறனற்றுப் போன பெருங்கூட்டத்தின்மீது அதிகாரம் செலுத்த முடியும் என்பதை அன்று நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டேன்.

என் சொற்பொழிவால் என்னோடு, தானும் திகைத்துப் போன நண்பன், என் பேச்சின் பிறப்பிடத்தை என்னிடமிருந்து அறிந்து கொண்டான். ‘என் மாமாதான் பள்ளிக்கூட தாளாளர்’ என்று கூறி,

பார்த்தசாரதி அய்யங்காரை தன் வீட்டிற்கு அழைத்துப் பேசினான். ‘சேவை செய்ய வேண்டுமானால் பலரிடம் பணிந்து போக வேண்டியிருக்கிறது’ என்று சிடுசிடுத்துவிட்டு, என்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டார்.

கோபம் மறைந்தபின் அவரே எனக்கு ஆங்கிலம் பேச கற்றுத் தந்தார். அவர் மூலம் சமஸ்கிருதம் சிறிதும், மேல்நாட்டு சிந்தனைகள் பற்றி நிறையவும் தெரிந்து கொண்டேன். அவை-யெல்லாம் என் மேடைப் பேச்சுகளுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றன.

இன்று ஐரோப்பிய பகுத்தறிவு மேதைகளைப் போலவே என்னாலும் நளினமாக, நாசுக்காக பகுத்தறிவுக் கருத்துகளை பக்கம்பக்கமாக எழுத முடியும். எவன் வாசிக்கப் போகிறான்? மேலும் அறை கொடுத்தால்தான் அந்தணனுக்கு உறைக்கும். அதனால்தான் இப்படி பேசுகிறேன்.

என் வார்த்தை காரமாக இருந்தாலும் அர்த்தம் சுத்தமானதாக இருக்கும். நான் பாவ, புண்ணியத்திற்கு பயந்து நடப்பவன். உண்மையை விரும்புகிறவன். பொய் சொல்ல நான் என்ன அவாளைச் சேர்ந்தவனா?

கிருஷ்ண பரமாத்மா ‘என் பக்தர்கள் விரும்புவதை உடனே கொடுத்துவிடுவேன். அப்போதுதான் காலப்போக்கில் நான் தருவதை மட்டும் விரும்பும் பக்குவத்தைப் பெறுவார்கள்’ என்று சொல்லி இருக்கிறார். அதையேதான் நானும் பின்பற்றுகிறேன்.

‘சமூக வளர்ச்சியில் சாதி அடுக்கமைப்பின் பங்களிப்பு’ என்ற நல்ல தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தினால், என் சீடப் பிள்ளைகளிலேயே நான்கைந்து பேர்கள்தான் வருவார்கள். அவர்களும் நன்றாக தூங்கி எழுந்துவிட்டு, ‘கேசரியில் இனிப்பு அதிகமாகி விட்டது. ஆனால், மசால்வடை அருமையாக இருந்தது’ என்று கருத்து சொல்லிவிட்டு போவார்கள்.

தன்னைவிட உயர்ந்தவன் அல்லது அப்படித் தோன்றுபவன் அழியவேண்டும் என்பதுதானே மனித மனத்தின் அந்தரங்க ஆவல்? மக்கள் விரும்பும் வகையில் அதிரடியாகப் பேசினால் பெரிய மைதானத்தில் உட்கார முடியாத அளவிற்கு கூட்டம்



திரண்டு விடும். ஆரவாரம், கைத்தட்டல், பாராட்டு, மாலை, மரியாதை, துண்டு, பொற்கிழி எல்லாமே கிடைக்கும். செய்தித்தாளில் படம் போட்டு செய்தி வரும். தேர்தலில் நிற்க பெரிய கட்சிகளிடமிருந்து அழைப்புகூட வரலாம்.

மேதை வருடக்கணக்காக உழைத்து ஒரு தரமான புத்தகம் எழுதினால், அவன் ஆயுள் முடியுமுன் சில நூறு பிரதிகள்கூட விற்கமுடியாது. மறுபதிப்பு செய்ய ஆளிருக்காது. இதுவே மக்கள் விரும்புவது போல திகிலான துப்பறியும் கதையோ, கவர்ச்சியான காதல்கதையோ எழுதினால் லட்சக்கணக்கான பிரதிகள் விற்கும். அப்படிப்பட்ட வாசக மந்தையிலிருந்துதான் பத்திருபது பேர் சுயமாக சிந்தித்து, கூட்டத்தை விட்டு விலகி, நல்ல இலக்கியத்தை வாழ வைக்க பாடுபடுவார்கள்.

எந்த இயக்கமும் வளர வேண்டுமானால் இதுதான் வழி. பாமர கூட்டத்தை சேர்த்துக் கொள்ளாமல் சமூக மாற்றங்களைக் கொண்டுவந்துவிட முடியாது. கடல்நீர் உப்பு கரிக்கிறதே என்று தயங்கி நின்றால், முத்தெடுக்க முடியுமா? பாமரக் கூட்டத்தின் நடுவே பரம ஞானி இருப்பான். அவன் வெளிப்பட ஒரு வழி வேண்டாமா? எனக்குத் தெரிந்த வழி இதுதான், வேறு வழிகளும் இருக்கலாம்.

பிராமணன் மட்டுமல்ல, ஒவ்வொரு சாதிக்காரனும், தனக்குக் கீழான சாதிக்காரனை கொடுமைப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறான். பிராமணன் எல்லோருக்கும் பொது எதிரி. அவனை அடித்தால்தான், வேடிக்கைப் பார்க்கப் பெரிய கூட்டம் கூடும். அப்போது நல்ல கருத்துகளை சொல்ல முடியும்.

ஒருமுறை பெரிய புயல் வந்தது. அது அடங்கியபின் ஊரே சகதியில் அகப்பட்ட கப்பலாகி விட்டது. ‘நோய் தடுப்பு பற்றி கூட்டம் போட்டுப் பேசுங்களேன்’ என்று கலெக்டர் கேட்டுக் கொண்டார். ‘இந்த சகதியில் யார் வருவார்கள்’ என்று கூட இருந்தவர் சொன்னார். உடனே ‘புயலின் பின்னணியில் பார்ப்பன சதி, பகிரங்கப்படுத்துகிறார் பகுத்தறிவு சார்’ என்று பல இடங்களில் அறிவிப்பு பலகை எழுதி வைத்தேன். வழக்கமான கூட்டத்தை-விட அதிகமான கூட்டம் வந்தது. சிறிது நேரம் பார்ப்பன சதியைப்

பற்றி பேசிவிட்டு, நோய்தடுப்பு முறைகள்பற்றி விரிவாகப் பேசினேன். கலெக்டருக்கு மிகவும் சந்தோஷம்.

கூட்டத்தை சேர்ப்பதற்காக ஆரம்பித்த அதிரடிப் பேச்சு வழி குதர்க்கமான வழிதான். இப்போது பழக்கமாகிப் போய்விட்டது. மாற்றிக் கொள்ள முடியவில்லை. உண்மையில் எனக்கு பிராமண துவேஷம் கொஞ்சமும் இல்லை. ஆனால், இதை வெளிப்படை-யாகச் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்.

மனிதர்கள் கூடுமிடம் எப்போதும் எனக்கு பிடித்தமான இடம். நல்ல கருத்துகளை நான்கு பேர்களிடம் சொல்ல வாய்ப்பு கிடைக்கும். தத்தாவின் நிச்சயதார்த்த நிகழ்ச்சியிலும் பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மங்களமக்காவின் வார்த்தைகள் என்னை அபிராமி பித்தரின் பக்கத்தில் உட்கார வைத்து விட்டன.

இந்த ஆன்மீகவாதிகளிடம் ஏதாவது பேசினால் 'அறிவிலி உளறுகிறான்' என்பது போல் ஒரு ஞானப் புன்முறுவல் பூத்துவிட்டு மௌனமாக இருப்பார்கள். மௌனம் அறியாமையின் முகமுடி என்பது எனக்குத் தெரியாதா என்ன? அதைக் கிழிக்காமல் விட்டு விடுவேனா?

'சாமி, நமஸ்காரம்' என்றேன்.

என்னைப் பார்த்து மந்தகாசப் புன்னகை செய்து லேசாகத் தலையசைத்தார் பித்தர்.

பித்தருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வாயாவி மாமா — வயது வித்தியாசமில்லாமல் எல்லோரும் அவரை அப்படித்தான் கூப்பிடுவார்கள் — 'என்ன சார், இன்று என்ன கலகம் செய்ய உத்தேசம்?' என்று கேட்டார்.

'கலகமெல்லாம் நாரதரைப் போன்ற ஆன்மீக ஞானிகள் செய்ய வேண்டிய வேலை. சாமியைப் பார்த்தால் துறவி போலத் தெரிகிறது. லௌகீக வாழ்வைப்பற்றி அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. அதைப்பற்றி அவரிடம் கொஞ்ச நேரம் பேசலாம் என்று தோன்றியது. பேச அனுமதி உண்டா?' என்று பணிவோடு கேட்டேன்.

'தாராளமாகப் பேசுங்கள் சார். நடைமுறையில் இல்லாவிட்டாலும் பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு என்று சட்டப் புத்தகம்



சொல்கிறதே. மேலும் இவர் ஆன்மீகவாதி. நீங்கள் எப்படி பேசினாலும் பொறுத்துக் கொள்வார். உங்கள் வீட்டிற்கு ஆட்டோவில் குண்டர்களை அனுப்பி வைக்கமாட்டார்' என்று கூறி உரக்க சிரித்தார் வாயாவி மாமா.

## 5. வாயாவி மாமாவின் பார்வை

தன்னலமற்ற தலைவனைச் சுற்றி சுயநலம் மட்டுமே அறிந்த மனிதர்கள் இருப்பதுவும், ஒளிமயமான ஞான குருவைச் சுற்றி இருள்மயமான அஞ்ஞான சீடர்கள் இருப்பதுவும் எக்காலத்திலும் தவறாமல் நடந்து வருகிறது. சுடர் விட்டு எரியும் குத்துவிளக்கின் ஒளிவட்டத்தைச் சுற்றி இருள் இருப்பது படைப்பின் இயல்பு. விளக்கு அணைந்தால் எங்கும் முழுமையான இருள் சூழ்ந்துவிடும்.

முழுமையான இருளை ஒளியற்ற நிலை என்று கூறலாம். அதையே அதீத அடர்த்தியுள்ள ஒளியின் நிறைநிலை என்றும் கூறலாம். கல்லில் அழகு எதையும் காண முடியாத மனிதன் சிற்பியாக மாறினால் அதே கல்லில் அற்புத அழகியை கண்டு கொள்கிறான். அறிவிலியின் சொல்லில் பொருள் எதையும் காண முடியாத மனிதன், படைப்பூக்கம் கொண்டுவிட்டால் அறிவின்மை மேதமையின் மேடை என்று அறிந்து கொள்கிறான். அறிவை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருப்பவன் அறிவிலி போலத் தோன்றுகிறான். அவனுடைய அறியாமை முழுமையடைய அனுமதித்தால், அவன் மேதையாகிவிடுகிறான். மாடு மேய்ப்-பவனின் அறியாமை முழுமை அடையும்போது, அவன் மகாகவி காளிதாசன் ஆகிறான்.

நான் பல வருடங்களுக்குமுன் பகுத்தறிவு சாரை பார்த்தபோது, காளி தரிசனம் பெற்றிராத மாடு மேய்ப்பவனைப் போலத்தான் இருந்தார். இப்போது கூடியவிரைவில் காளிதரிசனம் பெற்று விடும் முழுமையான நிலையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்!

முன்பு பொருளற்ற பெரிய வார்த்தைகளையும், மேல்நாட்டு மேதைகளின் பெயர்களையும் உதிர்த்துக் கொண்டே இருப்பார். பார்த்தசாரதி அய்யங்கார் பகுத்தறிவு சாருக்கு ஆங்கிலப் புலமையும், மேல்நாட்டு சிந்தனையறிவும் தந்தார். நல்ல ஆசிரியராக உருவாக்கிவிட்டார். கண்டிப்பும், கனிவும் மிகுந்த பார்த்தசாரதி அய்யங்காரின் தொடர்பால் பகுத்தறிவு சார் ஏராளமான நல்ல மேல்நாட்டு புத்தகங்களை ஒழுங்காக வாசித்து தேர்ந்தார். ஓரளவிற்கு சொந்தமாக சிந்திக்க ஆரம்பித்தார். நன்றாக ஆங்கிலம் பேச ஆரம்பித்துவிட்டார். சமஸ்கிருதத்தில் உபநிஷத மகாவாக்கியங்கள் சிலவற்றை அர்த்தம் தெரியாமல் மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். தமிழில் சில திருக்குறள்களை அர்த்தம் தெரிந்து மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். மற்றபடி இலக்கியத்தோடோ, ஆன்மீகத்தோடோ, அவருக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. மாபெரும் அறிஞனாக நம்மூர் மக்கள் போற்றி வழிபட இத்தனை தகுதிகள் போதாதா?

தன்னை பெரிய அறிவாளியாக நினைத்துக் கொண்டிருக்கும் பகுத்தறிவு சார் தன்னலமில்லாதவர். இவர் பேச்சைக் கேட்க கூட்டம் கூடினாலும் இவரைச் சுற்றி தொண்டர்களோ, குண்டர்களோ இல்லை. அதனால் இவரே தேடி சென்று பல சீடர்களை சேர்த்து வைத்திருக்கிறார். அவர்களது கைச்செலவிற்கு அவ்வப்போது பணம் கொடுத்து விடுவார். ஊரில் எங்கு, எவருக்கு அநீதி நிகழ்ந்தாலும், கூட்டம் சேர்த்துக் கொண்டு கோஷம் போடுவார்.

எனக்குத் தெரிந்தவரை எவருக்கும் கெடுதல் நினைக்காதவர். அறுபதை நெருங்கி கொண்டிருக்கிறார். உடலும், குரலும் கனமானவை. எப்போதும் கதர் வேட்டி, சட்டை அணிந்திருப்பார். பேச்சிலும், பார்வையிலும் ‘எல்லாம் எனக்குத் தெரியுமடா’ என்ற அலட்சிய பாவம் இருக்கும். அரசாங்க அதிகாரிகள் இவரிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள்.

சார் நாத்திகர். மனைவியோ முருகபக்தை. மகன் கம்ப்யூட்டர் பொறியாளன். அமெரிக்காவில் வேலை பார்க்கிறான். சார் சதா பிராமணரைத் திட்டிக் கொண்டே இருப்பார். சாரின் பிராமண வெறுப்பு என்பது தீவிர விஷ்ணு பக்தரான பார்த்தசாரதி அய்யங்கார் மீதுள்ள வெறுப்பே. பொதுவாக பகுத்தறிவு சார் எந்த சிந்தனையும்



இல்லாமல் வேகமாகப் பேசுவார். சிந்திக்காமல் பேசுவதால் இவர் பேச்சு பெரும்பாலும் சரியாகவே இருக்கும். சரியான பொருளை புரிந்து கொள்ள நமக்குப் பக்குவம் வேண்டும்.

‘இந்தியா பொருளாதாரத்தில் முன்னேறாமல் இருக்க காரணம் என்ன தெரியுமா? சோம்பேறியாக ஆன்மீகம் பேசிக் கொண்டி-ருப்பதுதான். வெளிநாட்டில் செல்வச் செழிப்பைப் பார்க்க கண்ணிரண்டு போதாது என்று என் பிள்ளை சொல்கிறான். ஒரு தடவை போய் வரவேண்டும்’ என்று ஆரம்பித்தார் பகுத்தறிவு சார்.

‘ஆனால் அங்கே ஆன்மீகம் இல்லாமல் போய்விட்டதே’ என்றேன்.

‘ஏன், வெளிநாட்டுக்காரன் நன்றாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஏதோ அவன் தயவில் எத்தனையோ சாதாரண இந்தியக் குடும்பங்கள் இன்று செழிப்பாக இருக்கின்றன’ என்றார் சார்.

‘யாரும் யார் தயவிலும் ஏன் இருக்க வேண்டும்?’ என்று கேட்டேன்.

என் கேள்வியைத் தவிர்த்துவிட்டு ‘சாமி, துறவறத்தாலோ, ஆன்மீகத்தாலோ மனிதனுக்கு என்ன பயன் கிடைக்கிறது?’ என்று பித்தரைப் பார்த்துக் கேட்டார் பகுத்தறிவு சார்.

‘பகுத்தறிவாலோ, விஞ்ஞானத்தாலோ யாருக்கு என்ன பயன் என்று நினைக்கிறீர்கள்?’ என்று கேட்டேன்.

‘ஐயா, பதில் சொல்ல முடியாவிட்டால் எதிர்கேள்வி கேட்டு மடக்குவது, சமாளிப்பது பழைய தருக்க தந்திரம். புதியதாக ஏதாவது செய்யுங்கள்’ என்று ஏளனமாகக் கூறி சிரித்தார் பகுத்தறிவு சார்.

‘அறிந்தேன், எவரும் அறியாமறையை, அறிந்துகொண்டு செறிந்தேன், நினது திருவடிக்கே, திருவே. வெருவிப் பிறிந்தேன், நின்னன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால் மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே’ என்று மெல்லிய குரலில் கூறினார் அபிராமி பித்தர்.

‘சாமி. சொல்வதை எனக்குப் புரிகிற நல்ல தமிழில் சொல்லுங்கள். கொச்சைத் தமிழில் சொன்னால் எனக்குப் புரியாது’ என்றார் பகுத்தறிவு சார்.

‘பாவம், பித்தர் உங்கள் பகுத்தறிவுத் தமிழை இன்னமும் கற்றுக் கொள்ளவில்லை. உங்களைப் போன்றவர்களிடம் பேசுவது நரகத்தில் இருப்பதற்கு சமானம் என்கிறார்’ என்றேன்.

‘விவாதம் என்று வந்துவிட்டபின் வசவுக்கு அஞ்சமாட்டேன். என் கேள்விக்கு என்ன பதில்?’ என்றார் பகுத்தறிவு சார்.

‘மனிதன் ஆண்டவனை அடையும் வழியை ஆன்மீகம் காட்டுகிறது. மனிதமனம் சிறிய இன்பங்களிலிருந்து விலகி, பேரானந்தத்தை மட்டும் நாடும் பக்குவத்தை துறவறம் தருகிறது’ என்றேன்.

‘இது சிறியது, இது பெரியது என்று சொல்ல நீங்கள் யார்? அவனவன் இன்பம் அவனவனுக்குப் பெரியது. வேதத்தைக் கொண்டாடிய காலத்தில் மனிதனுக்கு என்ன வசதி இருந்தது? மனிதனுக்கு நல்ல புத்தி வந்து பார்ப்பன வேதங்களை எல்லாம் மறந்துவிட்ட பின்னால்தான் விஞ்ஞான வளர்ச்சி வந்தது. எத்தனை எத்தனை வசதிகள், இன்பங்கள்! விஞ்ஞானம் தருகிற வசதிகளை, சந்தோஷங்களை நம்பினாலும், நம்பாவிட்டாலும் எல்லோராலும் அனுபவிக்க முடியும். ஒவ்வொன்றையும் அறிவுக்கும், புலனுக்கும் ஒத்து வரும்வகையில் விளக்கவும் முடியும். மீண்டும், மீண்டும் நிரூபிக்கவும் முடியும். ஆண்டவனைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும் அப்படி நிரூபிக்க முடியுமா? எத்தனையோ காலமாக, விஞ்ஞானி ஆன்மீகவாதியிடம் இதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறான். பதில்தான் இன்னமும் கிடைக்கவில்லை. விஞ்ஞானத்தை நான் உங்களுக்குக் காட்டுகிறேன், ஆன்மாவை எனக்குக் காட்ட முடியுமா?’ தன் முன்னிருந்த நாற்காலியை உள்ளங்கையால் ஓங்கித் தட்டினார் பகுத்தறிவு சார்.

‘தண்ணளிக்குமென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார், மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதி வானவர் தம் விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடும், அன்றோ? பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே’ என்றார் பித்தர்.

‘சாமி இப்போது என்ன சொல்கிறார்?’ என்று கேட்டார் சார்.



‘ஆன்மீகவாதிக்கு முக்திதான் பெரும்செல்வம் என்கிறார்’ என்றேன்.

‘இன்று வாத்சல்யா கொடுத்த அரை கோடி ஆடி காரில் சாமி வந்திருக்கிறார். இதுவே வேதகாலம் என்றால், மரக்கட்டை செருப்பு தேய நடந்து வந்திருக்க வேண்டும்’ என்றார் சார்.

‘பொருளே, பொருள் முடிக்கும் போகமே, அரும்போகம் செய்யும் மருளே, மருளில் வரும் தெருளே, என் மனத்து வஞ்சத்து இருளேதுமின்றி ஒளி வெளி ஆகிஇருக்கும் உன்தன் அருளேது அறிகின்றிலேன், அம்புயாதனத்து அம்பிகையே’ என்றார் பித்தர்.

‘சாமி எதற்கெடுத்தாலும் மனப்பாடச் செய்யுளை ஒப்பிக்கிறார்’ என்று சலித்துக் கொண்டார் சார்.

‘சார், அது மனப்பாடச் செய்யுள் இல்லை. அபிராமி அந்தாதி’ என்றேன்.

‘நான் படித்ததில்லை. எதுவும் சமஸ்கிருதத்தில் இருந்தால்தான் படிப்பேன்’ சற்றும் தயங்காமல் சொன்னார் சார்.

‘பொருள் உட்பட எல்லாமே அபிராமிதான். தனக்கு எதுவும் தெரியாது என்கிறார்’ என்றேன்.

‘சாமிக்கு எதுவும் தெரியாது என்பதுதான் எனக்கும் தெரியுமே ஐயா. ஆன்மாவை எனக்குக் காட்ட முடியுமா? அதற்கு பதில் சொல்லுங்கள்’ என்றார் பகுத்தறிவு சார்.

‘சார், பாலில் தயிரும், தயிரில் வெண்ணெயும், வெண்ணெயில் நெய்யும் இருக்கிறது. பாலைப் பார்க்கும்போது, நெய் தெரியவில்லை என்பதால் அது இல்லை என்றாகிவிடாது. மறைவாக இருப்பது வெளிவர மார்க்கம் ஒன்றை கண்டுபிடிக்க வேண்டும். நெய்யின் சட்டை பால். ஆன்மாவின் சட்டை ஜடம்’ என்றேன்.

‘விஞ்ஞானி எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து விட்டான். மனித உடலை வெட்டி அதற்குள் ஆன்மா இருக்கிறதா என்று தேடிப் பார்த்துவிட்டான்’ என்றார் சார்.

‘ததியுறு மத்தின் சுழலும் என் ஆவி’ என்றார் பித்தர்.

பித்தர் என்ன கூறவருகிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். ‘வெண்ணெய் வேண்டுமானால் தயிரை மத்தால் கடைய

வேண்டும். கத்தி கொண்டு வெட்டுவது பகுத்தறிவு இல்லை' என்றேன்

'ஆண்டவனோ, ஆன்மாவோ எங்கும் எதிலும் இல்லை. எந்த அளவிற்கு ஜடத்தை பிளக்க முடியுமோ, அந்த அளவிற்குப் பிளந்தாகி விட்டது. அணுவிற்குள் சக்தி மட்டும்தான் இருக்கிறது. எல்லாமே அணுக்களால் ஆனது என்பதால் எங்கும் சக்தி மட்டுமே இருக்கிறது' என்றார் சார்.

'குரு காணிக்கை' என்று சொன்ன பித்தர் ஒரு ரூபாய் நாணயத்தை சாரிடம் நீட்டினார்.

நான் புன்னகைத்தேன்.

புரியாமல் ஒற்றை நாணயத்தை வாங்கிக் கொண்டார். 'இது எதற்கு?' என்று கேட்டார்.

'பித்தர் சொன்னாரே! அத்வைத குருவிற்கு தட்சணை!' என்றேன்.

வில்லுக்கு விஜயனும், சொல்லுக்கு சாரும் கலங்குவார்களா என்ன?

'நடைபாதைமீது சட்ட விரோதமாக ஒரு கோவில் கட்டு- கிறார்கள். அதை எதிர்த்து போராட்டம் நடத்தப் போகிறேன். அந்த செலவிற்கு இந்த ரூபாய் பயன்படும்' என்று சொல்லிவிட்டு அதை தன் சட்டைபையில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

'நாத்திக நாரதரே, உங்களுக்கு ஸ்வேதகேதுவின் கதை தெரியுமா?' என்று கேட்டேன்.

'எனக்குத் தெரியாத வேத, வேதாந்தக் கதைகளை இனிமேல் தான் யாராவது எழுத வேண்டும். பெண் விடுதலைக்கு குரல் கொடுத்தவன் ஸ்வேதகேது. அவன்தானே நம் தேசத்தின் முதல் சீர்திருத்தவாதி?' என்றார் பகுத்தறிவு சார்.

'நான் சொல்ல நினைத்த கதை வேறு. முதலில் உங்களுக்குத் தெரிந்த கதையைச் சொல்லுங்கள்' என்றேன்.

நடிகனுக்கு தன் நடிப்பை யாராவது பார்த்தாக வேண்டும். பேச்சாளனுக்கு தன் பேச்சை யாராவது கேட்டாக வேண்டும். உற்சாகமாகிவிட்ட பகுத்தறிவு சார், மேடையில் பேசுவது போல பேச ஆரம்பித்துவிட்டார்.



"அது காலமே மறந்து விட்ட காலம். உத்தாலகர் என்ற போலி சாமியாருக்கு அழகான மனைவியும், அறிவாளியான ஸ்வேதகேது என்ற மகனும் இருந்தனர். ஒரு நாள் வயதான கள்ள பார்ப்பனன் அவர் குடிலுக்கு வந்தான். 'எனக்குப் பிள்ளை இல்லை. நரகத்திற்குப் போக நேரிடும். அதனால் உன் மனைவியை எனக்கு தானமாகக் கொடு. அவள் மூலம் பிள்ளை பெற்று சொர்க்கத்திற்குப் போகிறேன்' என்றான். கணவரைத் தவிர வேறொருவரை ஆழ்மனக் கனவிலும் நினைத்திராத மனைவி அதிர்ச்சி அடைந்தாள். போலி சாமியாரோ, 'சாஸ்திரப்படி பிராமணர் சொல்வது சரிதான். அவரது பிறவிக் கடமை நிறைவேற நீ துணை போவதுதான் முறை' என்றார். கொதித்து எழுந்து விட்டான் ஸ்வேதகேது. 'சாஸ்திரம் என்று சொல்லி பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவள்மீது சிறு துரும்பையும் திணிப்பது சரியில்லை. அது அறமாகாது, நெறியாகாது. அப்படிப்பட்ட அபத்தமான சாஸ்திரங்களை நான் நிராகரிக்கிறேன். இன்று முதல் ஒருவன், ஒருத்தியோடு வாழ்வதே அறநெறியாகும் என்று சாஸ்திரங்களை மாற்றி அமைக்கிறேன். மீறுபவர்களை தண்டிப்பேன்' என்றான். பயந்துபோன பார்ப்பனன் ஓடியே போய்விட்டான். ஒருவரையே காதலித்து, அந்த ஒருவரையே கல்யாணம் செய்து கொண்டு, அவரையே காதலித்து வாழவேண்டும் என்ற நல்ல வழக்கம் அதற்குபின்தான் நம் தேசத்தில் நடைமுறைக்கு வந்தது" என்று உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்த பகுத்தறிவு சார் பேச்சை சிறிது நிறுத்தினார்.

ஒரு தட்டில் காபி கோப்பைகளோடு தரங்கிணி வந்தாள். 'காபி சாப்பிட்டுவிட்டு அப்புறமாக பேசுங்கள்' என்று புன்னகையோடு கூறினாள்.

'பேச்சாளனுக்கு சூடாக ஏதாவது கிடைத்துக் கொண்டே இருந்தால்தான் நன்றாகப் பேச முடியும். யாராவது காபி கொடுத்தால் நன்றாக இருக்குமே, யாரிடம் கேட்பது என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். நீ கொண்டு வந்து விட்டாய்' என்று கூறிக் கொண்டே கோப்பை ஒன்றை எடுத்துக் கொண்டார் சார்.

'எது வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள் சார், நான் தருகிறேன்' என்றாள் தரங்கிணி.

நான் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு சூடுதணித்து பருக ஆரம்பித்தேன். அபிராமி பித்தர் வேண்டாம் என்பது போல லேசாகத் தலையசைத்து மறுத்து விட்டார்.

அவள் அப்பால் சென்றபின் ‘நல்லபெண், ஏதோ பெரிய கவலையில் இருக்கிறாள் என்று தோன்றுகிறது’ என்றார் சார்.

‘பட்டும், வைரமும், புன்னகையுமாக நன்றாகத்தானே இருக்கிறாள்?’ என்று கேட்டேன்.

‘என்னவோ எனக்கு அப்படித் தோன்றியது’ என்றார் சார்.

‘உங்கள் கதையிலிருந்து என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?’ என்று கேட்டேன்.

‘கல்தோன்றி, மண்தோன்றா காலத்திற்குமுன் தோன்றிய மூத்த குடியான எங்கள் குடியின் முதல் பகுத்தறிவு பெருமகன் ஸ்வேதகேது என்பது உங்களுக்குப் புரியவில்லையா?’ என்றார் சார்.

‘அவர் பிராமணர்தானே?’ என்று கேட்டேன்.

‘அப்படி இருக்கவே முடியாது. பார்ப்பனரால் நல்லது எதையும் நினைக்கவோ, செய்யவோ முடியாது’ என்றார் பகுத்தறிவு சார்.

‘நீங்கள் சொன்ன கதையிலிருந்து புரிந்து கொள்ள வேண்டியது வேறு. எந்த சாஸ்திரமும், அறநூலும் முடிவானதல்ல. மனித குலத்தை மேம்படுத்த நினைத்து செயல்படும் அசலான சுய சிந்தனையாளன் கேள்வி எழுப்பும்போது பழையவை முடிவிற்கு வருகின்றன. புதியவை பிறக்கின்றன என்று ஒரு சிந்தனையாளர் சொல்கிறார்’ என்றேன்.

‘சரி, சரி உங்கள் கதையை சொல்லுங்கள்’ என்றார் சார்.

‘மகரிஷி உத்தாலகர் தன் மகன் ஸ்வேதகேதுவை சிறு பிள்ளையாக இருக்கும் போதே பிற ஞானியரிடம் பாடம் கற்க அனுப்பி வைத்தார். இருபத்தி நான்கு வயதில் ஞானியாக திரும்பி வந்தான் ஸ்வேதகேது. ‘மகனே, கேட்டறியாததை கேட்டறியவும், கண்டறியாததை கண்டறியவும், புரிந்தறியாததை புரிந்தறியவும் உதவும் உன்னத ஞான வித்தையை கற்றாயா?’ என்று கேட்டார். திகைத்து போன ஸ்வேதகேது, ‘அதைப்பற்றி எனக்கு கூறுங்கள்’ என்று கேட்டுக் கொண்டான். மகரிஷி ‘செம்பு பாத்திரங்கள் பல



ரூபங்களில் இருந்தாலும் செம்பு என்கிற உலோகம் ஒன்றுதான். விதையைப் பிளந்து பார்க்கும்போது அதில் ஒன்றுமில்லை என்று தெரிந்தாலும் அதற்குள் மாபெரும் மரம் மறைந்திருக்கிறது. உப்பை நீரில் கரைத்தால் நீரின் எல்லாத் துளிகளிலும் உப்பு நிறைகிறது’ என்று பலவாறாக பிரம்மத்தைப்பற்றி கூறினார். ‘ஆனால் இந்த விளக்கங்களில், உதாரணங்களில் எது உண்மை? எது அறிதல் முறை? எது உன்னத ஞான வித்தை?’ என்று கேட்டான் ஸ்வேதகேது.

‘ஒரு கருப்பு துணியை எடுத்து அவன் கண்களை கட்டிய மகரிஷி ‘அப்படியே காந்தாரத்திற்கு போ. உன்னை அங்கு சந்திக்கிறேன்’ என்றார். தட்டுதடுமாறி நடந்தான் ஸ்வேதகேது. ஆங்காங்கே எதிர்பட்டவர்களிடம் வழி கேட்டான். ஒவ்வொரு முறையும் தவறான பாதையில் சென்று முடிந்த பாதையில் முட்டி நின்றான். ஆனால், அங்கிருந்து மீண்டும் விசாரித்து கொண்டு, அலைந்து திரிந்து இறுதியாக காந்தாரம் வந்து சேர்ந்தான். அவனுக்குமுன் அங்கு சென்று காத்திருந்த உத்தாலகர், ‘மகனே, என்ன தெரிந்து கொண்டாய்?’ என்று கேட்டார். ‘அறிதல் முறை என்பது நடுவில் நின்றுவிடாமல் இறுதிவரை பயணத்தை தொடர்வதே என்று தெரிந்து கொண்டேன்’ என்றான் ஸ்வேதகேது. ‘அவன் மட்டுமே வெற்றிக்கு உரியவன்’ என்று கூறி மகனை ஆரத்தழுவி ஆசிர்வதித்தார் உத்தாலகர்‘ என்று கதை சொல்லி முடித்தேன்.

சற்று நேரம் மௌனமாக இருந்த சார், ‘என்னை நடுவழியில் முட்டி நின்றுவிட்டவன் என்கிறீர்களா? இத்தனை வருடங்களாக நான் பேசியது, செய்தது எல்லாம் தப்பு என்கிறீர்களா? ஆன்மீகவாதிதான் சரி என்கிறீர்களா?’ என்று நிதானமாகக் கேட்டார்.

‘ஆன்மீகவாதிகள் சொல்வதெல்லாம் சரி என்று நான் எப்போது சொன்னேன்? என்னைப் பொறுத்தவரை தப்பு என்பது சத்தியத்தின் சேவகன். தப்பான சிறுவழி சரியான பெருவழியின் ஒரு பகுதிதான். பகுத்தறிவு இல்லை என்றால் இந்த உலகமே பாழ்பட்டுப் போயிருக்கும். அரைகுறை ஆன்மீகம் ஆபத்தானது, சமூகத்தை சீரழித்து விடும். அந்த ஆபத்தை பகுத்தறிவுதானே அழிக்கிறது? நாத்திகம் பேசும் பகுத்தறிவாளன்தான் உண்மையான ஆன்மீகத்தின்

சரியான பாதுகாவலன். உங்களைப் போல ஒருவர்கூட இல்லாமல் போனதால்தானே தத்தாவின் அப்பா தவறான சாமியார்களின் பேச்சை நம்பி சொத்தை இழந்தார்?' என்று நான் சொன்னவுடன் சாரின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

'என்னைப் போலவே நீங்களும் நன்றாக சிந்திக்கிறீர்கள்' என்று என்னைப் பாராட்டினார்.

'சட்டென்று நள்ளிரவும், சட்டென்று நடுப்பகலும் உருவாவ-தில்லை. அதிகாலை, முன்னிரவு, பின்னிரவு என்று இடைப்பட்ட நேரங்கள் பல உள்ளன. எல்லாவற்றையும் ஏற்றால்தான் முழு நாள் கிடைக்கும். இருள் என்பது ஒரு முனை. பகல் என்பது எதிர்முனை. ஒரு முனையிலிருந்து எல்லா இடைநிலைகளையும் கடந்து வந்தால்தான் மறுமுனையை அடையமுடியும். பொருள் ஒரு முனை. ஆன்மா எதிர்முனை. இடையில் பல நிலைகள்' என்றேன்.

'என்னதான் சொல்லுங்கள், உவமைகளும், உதாரணங்களும் மட்டுமே உண்மையை நிரூபிக்க முடியாது. நான் பார்ப்பது, கேட்பது எல்லாம் பொய்யா?' என்று கேட்டார் சார்.

'தடை ஏற்பட்டால் மனம் தெரிந்ததை மட்டுமே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கும். ஸ்வேதகேது முட்டி நின்றுவிட்டதால் காந்தாரம் இல்லை என்றாகிவிடுமா? புலன்-களுக்கு அப்பாற்பட்ட விஷயத்தைபற்றி தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டாமா?' என்றேன்.

'புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயமென்று ஏதாவது உண்டா?' என்று கேட்டார் சார்.

'தரங்கிணி கவலையில் இருக்கிறாள் என்று எந்த அறிவை வைத்து, எந்த புலனைக் கொண்டு தெரிந்து கொண்டீர்கள்? புலன்களை வைத்துப் பார்த்தால் அவள் சந்தோஷமாக இருப்பது போலத் தெரிகிறதே?' என்றேன்.

'எதைப்பற்றியும் யோசிக்காமல் இருக்கும்போதுகூட சில விஷயங்கள் நமக்கு தாமாகவே புரிகிறதே ஐயா' என்றார் பகுத்தறிவு சார்.

'அதுதான் சார் போதம். அதற்கு இன்னொரு பெயர்தான் சார் சித்தம். மனதிற்கும், அறிவிற்கும் எட்டாதது சித்தத்திற்கு எட்டும்' என்றேன்.



'எனக்கும் சித்தம் இருக்கிறது என்கிறீர்கள்?' என்றார் சார்.

'எல்லோருக்கும் இருக்கும்போது உங்களைப் போன்ற அறிவாளிகளுக்கு இருக்காதா? நீங்கள் சித்தர். பகுத்தறிவு சித்தர்' என்றேன்.

அருகிலிருந்த எல்லோரும் சாரோடு சேர்ந்து சிரிக்க, பித்தர் புன்னகைத்தார்.

அப்போது வாத்தியங்களின் ஒலி அதிகரித்தது. தத்தா மேடை ஏறும்போது வாத்சல்யா மண்டபத்திற்குள் நுழைவதை கவனித்தேன். அவளை வரவேற்க மங்கல ஒலி எழுகிறது, தத்தாவிற்காக அல்ல என்று நினைத்துக் கொண்டேன்.

## 6. வாத்சல்யாவின் பார்வை

'நேசமுடன் யான் நெற்றியில் அணிய பாச வினைகள் பற்றது நீங்கி உன்பதம் பெறவே உன்னருளாக' என்ற கந்தர் சஷ்டி கவச வரிகளை சொல்லிக் கொண்டிருக்கும்போதே மண்டபம் வந்துவிட்டது.

டிரைவரண்ணா கார் கதவை திறந்துவிட்டார். 'கார் கதவை நானே திறந்து கொள்கிறேன்' என்று சிறு வயது முதல் எத்தனையோ முறை கூறிவிட்டேன். கேட்கமாட்டார், 'நான் திறப்பதுதான் முறை சின்னம்மா' என்று கூறி விடுவார். 'பெயர் சொல்லிக் கூப்பிடுங்கள். நீங்கள் என் அப்பாவைப் போல' என்றால் 'உங்களை மகளாகப் பெறுகிற அளவிற்கு நான் புண்ணியசாலி இல்லை சின்னம்மா' என்பார். நான் சிறு குழந்தையாக இருந்தபோது என்னை பாப்பா என்று கூப்பிட்டவர் இப்போது எனக்கு இருபத்தைந்து வயதாகிவிட்டதால் சின்னம்மா என்று கூப்பிடுகிறார். மற்றபடி அன்றுமுதல் இன்றுவரை அதே பணிவு, அதே அடக்கம், அதே மரியாதை. இவர் மட்டுமில்லை, வம்சியைத் தவிர மற்ற எல்லோருமே இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்.

பிறர் என்னிடம் காட்டும் பணிவும், எனக்குத் தரும் மரியாதையும் எனக்கு சங்கடத்தையே தருகின்றன. அதிலும், நிச்சயதார்த்தம் போன்ற பொது நிகழ்ச்சிகளின்போது மற்றவர்கள் என்னிடம்

நடந்து கொள்ளும் முறையால் எனக்கு ஏற்படும் கூச்சத்தின் அளவை விளக்க முடியவில்லை. பரம்பரை வைர வியாபார குடும்பத்தை சேர்ந்த அப்பாவிற்கும், பரம்பரை பட்டு வியாபார குடும்பத்தை சேர்ந்த அம்மாவிற்கும் ஒரே மகளாகப் பிறந்த காரணத்தால் எனக்கு தினமும் இதுபோன்ற தண்டனை கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

ஒருமுறை என் ஜாதகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஜோதிடர் பராசர மாமா, நான் ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று கன்யாகுமரி தேவிக்கு பூஜை செய்வது நல்லது என்றார். அவர் எது சொன்னாலும் அப்படியே பலிக்கும் என்று அப்பா அடிக்கடி சொல்வார். எனக்கும் அவர்மீது மிகவும் நம்பிக்கை உண்டு. வம்சிக்கு பராசர மாமாதான் பிரஸ்ன சாஸ்திரம் சொல்லிக் கொடுத்தார். கேள்வி கேட்கும் நேரத்தில் சூழலில் என்ன நடக்கிறது என்பதையும், சோழிகள் சொல்லும் கிரக நிலையை வைத்தும் எதிர்காலத்தில் நடக்கப் போவது என்ன என்று கணித்து சொல்வதுதான் பிரஸ்ன சாஸ்திரம். ஆடிமாதம் விஷேச பூஜை செய்ய வேண்டும் என்று மாமா சொன்னதும் எனக்கு சந்தோஷமும், சிரிப்பும் வந்து விட்டது. ஆடி மாதம் என் வாழ்க்கையில் முக்கியமான மாதம். வம்சியை ஆடி மாதமொன்றில்தான் சந்தித்தேன்.

அப்பாவிற்கு வேலை இருந்ததால் சந்துரு அண்ணாவோடு குமரிக்குப் போனேன். ‘அப்பாடா, இது நம்மூரிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் ஊர். என்னை யாருக்கும் தெரியாது, எல்லோரையும் போல சுதந்திரமாக அம்மனை தரிசனம் செய்யலாம்’ என்று சந்தோஷமாக பொதுதரிசன வரிசையில் நின்றேன். சந்துரு அண்ணா கோவிலில் இருந்த ஒரு அண்ணாவோடு ஏதோ ரகசியம் பேசினார். சிறிது நேரத்தில் கோவில் முக்கியஸ்தர்கள் என்னைத் தேடி வந்து ‘நீங்களாவது, வரிசையில் நிற்பதாவது! நாங்கள் என்ன பாவம் செய்தோம்?’ என்று கூறி பூச்செண்டு கொடுத்து, மரியாதை செய்து நேரே அம்மன் சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். வரிசையில் நின்றவர்கள் என்னைப் பார்த்த பார்வையில் இருந்த வெறுப்பையும், வருத்தத்தையும் இப்போது நினைத்தாலும் கஷ்டமாக இருக்கிறது. மனிதர்கள் முன்னிலையில்தான் பாகுபாடு



என்றால், அம்மனின் முன்னிலையிலுமா? நான் என்ன பாவம் செய்தேனோ!

அன்று சந்தனம் பூசி பேரழகோடு தனித்து நின்று கொண்டிருந்த குமரிதேவியைப் பார்த்தபோது நெஞ்சம் உருகி விட்டது. ‘எதை மனதில் வைத்துக் கொண்டு இவள் இப்படி தன்னந்தனியாக தவமிருக்கிறாள்?’ என்ற கேள்வி எழுந்தது. ‘மதுரை மீனாட்சி, சொக்கநாதரை கல்யாணம் செய்து கொண்டு எத்தனை அழகாக குடும்பம் நடத்துகிறாள். இவள் மட்டும் ஏனிப்படி இருக்கிறாள்?’ என்ற கேள்வி திரும்பத் திரும்ப எழுந்து கொண்டே இருந்தது. ‘சிவபெருமானுக்குத்தான் எத்தனை ரூபங்கள்! அவற்றில் ஒன்றைக் கூடவா இவள் காதலிக்கவில்லை? என்ன பெண்ணிவள்?’ என்று தோன்றியது.

அம்மனை கும்பிடாமல் சிற்பங்களையும், சித்திரங்களையும் கண்ணிமைகளை சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சந்துரு அண்ணாவிடம் கேட்டபோது அவர் தன் பாணியில் விளக்கம் சொன்னார். ‘பெண்ணாகப் பிறந்தவள் மனதில் காதல் துளிர்க்காமல் இருக்குமா? ஆனாலும், உலக நன்மைக்காக சிவபெருமானை விட்டுப் பிரிந்து நிற்கிறாள். லட்சியம் நிறைவேறியதும் அவன் வருவான் என்று இரவும், பகலும் கண்மூடாமல் காத்துக் கொண்டே இருக்கிறாள்’ என்றார்.

‘அய்யோ பாவம், கேட்கவே கஷ்டமாக இருக்கிறது’ என்றேன்.

‘பெரியவர்கள் பேச்சைக் கேட்காத காதலர்களை கடுமையாக தண்டிக்க வேண்டுமானால், பெரியவர்களே முன்னின்று காதலர்களுக்கு கல்யாணம் செய்து வைத்து விடவேண்டும். காதலை ஒழித்துக் கட்ட அதைவிட சிறந்த வழி எதுவுமே இல்லை. அனார்கலியை வெறுத்த அக்பர், அம்பிகாபதியை வெறுத்த குலோத்துங்கன் போன்ற மனிதர்களுக்கு அந்த சூட்சுமம் தெரியவில்லை. குமரி அன்னைக்குத் தெரிந்திருக்கிறது. காதலை வாழ வைக்க கல்யாணம் செய்து கொள்ளாமலே இருக்கிறாள்’ என்றார் சந்துரு அண்ணா.

அவளது தனிமையில், பிரிவில் இருந்த லட்சியமும், உறுதியும் கொண்ட தீராக்காதல் என்னை மிகவும் கவர்ந்தது. ஆனால், மனம் பாரமாகி விட்டது. குமரி அன்னைக்கு சீக்கிரம் கல்யாணமாக

வேண்டும் என்று அவளிடமே வேண்டிக் கொண்டு ஊர் திரும்பினேன்.

வம்சியிடம் சொன்னால் 'எதையும் யோசிக்காமல் எதற்கெடுத்-தாலும் உணர்ச்சிவசப்படுகிறாய். சரியான மக்கு' என்று என்னைப் பார்த்து சிரிப்பார். நான் என்ன செய்வது? எவரது கஷ்டத்தைப் பார்த்தாலும், அவரது கஷ்டம் உடனே தீர வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறதே.

பணம் தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக வெளியே போகும்போதெல்லாம் கைப்பை நிறைய ரூபாய் தாள்களை எடுத்து வைத்துக் கொள்வேன். யார் உதவி கேட்டாலும், 'என் சகோதர, சகோதரிகளுக்கு என்னால் முடிந்த சிறிய உதவி' என்று நினைத்துக் கொண்டு அவர்களது தட்டுகளில் கையில் எந்த ரூபாய்தாள் வருகிறதோ அதை வைத்து விடுவேன். அப்போதெல்லாம் கூசிக் குறுகிப் போவேன். எவரும் என்னை நினைவில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று தோன்றும். அவர்கள் என்னை கும்பிட்டு 'மகராசியாக இரு தாயே' என்று சொல்லும்போது அவமான உணர்வு எழுந்து மனம் கசந்து போய் விடும். அடுத்தவர் தன்மானத்தை இழப்பதை என் கையால் செய்ய வைத்துவிட்ட அம்பாள்மீது கோபம் வரும். தப்பு. தப்பு. அப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. தெய்வ குற்றம். கன்னத்தில் போட்டுக் கொண்டேன். தத்தா அண்ணா உலகத்தில் இப்போது இருக்கும் கல்வி முறையை மாற்ற முயற்சி செய்கிறாராம். அதை அவர் செய்ய அம்பாள் உதவட்டும். கூடவே எந்த கஷ்டமும் எவருக்கும் இல்லாத உலகத்தை அம்பாள் உடனே உண்டாக்கி விட்டால் நன்றாக இருக்கும்.

தத்தா அண்ணாவின் நிச்சயதார்த்தத்தில் கலந்து கொள்ள நான் மண்டபத்திற்குள் நுழையும்போது விருந்திற்குப்பின் மீதமாகும் உணவிருக்கும் இலைகளை எடுப்பதற்காக தூரத்தில் பலபேர் பசியோடு காத்திருப்பதைப் பார்த்தேன். மனம் வேதனையில் ஆழ்ந்தது. எனக்கு இன்னமும் கல்யாணம் ஆகவில்லை. குழந்தைகள் இல்லை என்றாலும், உலகில் பசித்திருக்கும் உயிர்கள் எவற்றிற்குமே உணவிடாத கல்நெஞ்சத்தாயாக என்னை உணர்ந்தேன். நெஞ்சமுருகி, கண்களில் நீர் திரண்டுவிட்டது.



ஆனால், என்னால் கண்ணீர் விடமுடியாது. ஒரு துளி நீர் வந்தாலும், 'சின்னம்மா கண்ணில் தூசி விழுந்துவிட்டது' என்று பத்திருபது பேர் என்னை சூழ்ந்து கொண்டுவிடுவார்கள். மனதார கண்ணீர் விடக்கூட சுதந்திரமில்லாத பொற்கூண்டுப் பறவையாகி விட்டேன்.

மண்டபத்திற்குள் நான் நுழையும்போது இன்னிசை முழங்க தத்தா அண்ணா மேடையில் ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர் பார்வை கூட்டத்தின் நடுவே நிலைத்திருந்தது. தத்தா அண்ணாவும், அவர் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் அண்ணியும் நன்றாக இருக்க வேண்டும்.

பின்வரிசையில் வம்சியும், அவரது நண்பர்களும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பதை கவனித்தேன். இதயம் துள்ளியது. ஓட்டமாக ஓடிச் சென்று அவரோடு பேச வேண்டும் போலிருந்தது. ஆண்களுக்கு கால்கட்டு கல்யாணம். பெண்களுக்கு கால்கட்டு நாணம். காதலைப் படைத்து விட்டு, நாணத்தையும் படைத்த கடவுள் குறும்புக்காரர்தான்.

முன்வரிசையில் அபிராமி பித்தரய்யா இருப்பதைப் பார்த்தேன். கால்கள் தாமாக பித்தரய்யாவை நோக்கி நடந்தன. என்னை கண்டதும் எழுந்து நின்று சங்கடப்படுத்தினார். அவரது கால்களில் விழுந்து நமஸ்காரம் செய்தேன். மனமோ வம்சிமீது குவிந்திருந்தது, ஒன்றாகப் படித்தவர்களான சந்துரு அண்ணா, தத்தா அண்ணா, கரிகாலண்ணா, பவித்ரன் அண்ணா, வம்சி எல்லோரும் பித்தரய்யாவிடம் சீடர்களைப் போலிருந்தவர்கள்தான். இப்போது ஏனோ தள்ளி நிற்கிறார்கள்.

'சௌபாக்கியவதியாக இரு அம்மா' என்று ஆசிர்வாதம் செய்த பித்தரய்யா அபிராமியின் குங்குமம் தர, அதை நெற்றியில் இட்டுக் கொண்டேன். இதை வம்சி வைத்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

'அய்யா, நீங்கள் எழுந்திருக்கலாமா?' என்று கேட்டேன்.

'பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணி, பிறப்பறுக்க முன்னே தவங்கள் முயன்று கொண்டேன். முதல் மூவருக்கும் அன்னே, உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே, என்னே?

இனி உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே' என்ற பித்தரய்யா அமர்ந்து கொண்டார்.

புன்னகைத்து 'அய்யா, என்னை கேலி செய்யாதீர்கள்' என்றேன்.

'மரியாதை அகத்திற்கு உண்டு, புறத்திற்கு இல்லை என்று பொதுவாக சொல்லலாம். ஆனால் தாயே, உன் நிலை வேறு. உன் அகம், புறம் இரண்டுமே ஒன்றுதான். உனக்கு மரியாதை செய்வது தப்பென்றால், அதை நான் சந்தோஷமாக செய்வேன்' என்றார் பித்தரய்யா.

ஓரக் கண்களால் பின்வரிசையைப் பார்த்தேன். வம்சியைக் காணோம். அதற்குள் எங்கே மறைந்து விட்டார்?

'யாரை அம்மா தேடுகிறாய்? என்னை என்றால், நான் இங்கு உன் பக்கத்தில்தான் இருக்கிறேன்' என்றார் பகுத்தறிவு சார்.

புன்னகைத்துவிட்டு அவரருகே இருந்த நாற்காலியில் சாயாமல் அமர்ந்து கொண்டேன். சார் மிகவும் நல்லவர்தான், ஆனால், கடவுளை சதா திட்டிக் கொண்டே இருப்பார். கேட்க கஷ்டமாக இருக்கும். 'தாயே, மீனாட்சி, என் முன்னால் சார் நாத்திகப் பேச்சு பேசாதபடி பார்த்துக் கொள்' என்று அவசரமாக ஒரு பிரார்த்தனை செய்து கொண்டேன்.

## 7. வம்சியின் பார்வை

விரும்பி நெருங்கும்போதெல்லாம் வெறுத்து விலகுவதும், வெறுத்து விலகும்போதெல்லாம் விரும்பி நெருங்குவதும் பெண்மையின் இயல்பான தன்மையா? அல்லது ஆண்மையை அடிமையாக்க முனையும் சூழ்ச்சியா?

வாத்சல்யாவை தினமும்தான் பார்க்கிறேன். இருப்பினும், நிச்சயதார்த்தம் போன்ற நிகழ்ச்சிகளில் அவளைப் பார்ப்பது தங்கரதமேறி ஊர்வலம் வரும் அலங்கரிக்கப்பட்ட அம்மனை



தரிசனம் செய்வது போன்ற உணர்வைத் தரும். அதற்காகத்தானே எல்லோருக்கும் முன்பாக வந்து மண்டபவாசல் எக்கோணத்திலும் நன்றாகத் தெரியுமிடத்தில் உட்கார்ந்து கொண்டு, கரிகாலனின் சமூக சீர்திருத்தப் பேச்சை, உறுத்தும் ஊழ்வினையே என்று கேட்டுக் கொண்டிருந்தேன்?

வாசலில் நுழைந்தவள் என்னைப் பார்த்தாள். என்னை பொருட்படுத்தாமல் பித்தரை நெருங்கி வணங்கினாள். பின் பகுத்தறிவு சாரின் அருகே அமர்ந்து கொண்டுவிட்டாள். அவளது முகமுழுமதியை முன்னிருக்கும்போது புறக்கண்களாலும், அருகில் இல்லாதபோது அகக்கண்களாலும், உறங்கும்போது கனவுக்கண்களாலும் காண்பதை சுவாசிப்பதைவிட சீராகச் செய்து வருபவனுக்கு புறக்கணிப்புதான் வெகுமதியா?

சட்டென்று எழுந்து அவள் பார்வையில் படாமல் முதல் மாடிக்கு சென்று ஒரு இருட்டான மூலையில் அமர்ந்து கொண்டு, அங்கிருந்தபடியே மண்டப மின் விளக்குகளை மங்க வைத்துக் கொண்டிருந்தவளை பார்த்துக் கொண்டிருந்தேன். பல ஆண்டுகள் பழகிய பின்னும், ஒவ்வொரு முறையும் இப்போதுதான் புதிதாகப் பார்ப்பதைப் போன்ற உணர்வையே தருகிறாள். என்னால் வாத்சல்யாவின்மீது சில கணங்களுக்குமேல் கோபம் கொள்ள முடிந்ததே இல்லை. அவள்மீது கோபமா? அல்லது அவளைப் போல தூய்மையாக இருக்க அனுமதிக்காத என் சொந்த சுபாவத்தின்மீது கோபமா?

எத்தனையோ ஆன்மீக குருக்களை பணிந்து அவர்களது அன்பிற்குப் பாத்திரமாகி விட்டேன். எத்தனையோ ஆன்மீக நூல்களைப் பயின்று பலருக்குப் புரியாத தத்துவங்கள் பலவற்றைப் புரிந்து கொண்டுவிட்டேன். ஆனால், பெண்ணெனும் பெருந்தத்துவம் மட்டும் இன்றளவும் என்னை எள்ளி நகையாடிக் கொண்டுதான் இருக்கிறது. என் அறிவும், படிப்பும், அனுபவமும், ஆன்மீகமும், அகந்தையும் அவளிடம் ஒவ்வொரு கணமும் தோற்றுக் கொண்டேதான் இருக்கின்றன.

மத்திய வகுப்பு குடும்பத்தில் பிறந்தவன் உயிர் வாழ பணம் சம்பாதிக்க வேண்டும், பணம் சம்பாதிக்க வேலை தேட வேண்டும். வேலை தேட படிக்க வேண்டும். படித்து, வேலை

தேடி, பணம் சம்பாதித்தபின், தன் குழந்தைகளைத் தன் போலவே வளர்க்க வேண்டும். சமூகத்தோடு ஒத்திசைந்து இதுபோல வாழ்ந்தால் வாழ்க்கை கடிகாரம் நிற்கும்வரை சீராக சுற்றியபடி இருக்கும்.

அதை விட்டுவிட்டு, ஆன்மீக தேடலில் ஆர்வம் கொண்டு விட்டால், வாழ்க்கையில் சிக்கல் உண்டாகிவிடுகிறது, அது போதாதென்று காதலிலும் தன்னை இழந்துவிட்டால், வாழ்தலே சிக்கலாகி விடுகிறது, என் சிக்கலை தீர்க்கவல்லவள், என்னை வாழவைக்கக் கூடியவள் வாத்சல்யா மட்டுமே என்பது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. அப்புரிதல்தான் அவள்மீது எனக்கு கோபத்தையும், வெறுப்பையும் உண்டாக்குகிறது.

என்னைப் புறக்கணித்துவிட்டு, சாரிடமும், பித்தரிடமும் பேசி என்ன சாதிக்கப் போகிறாள்? 'புலன்கள் காட்டுவது மட்டுமே பிரபஞ்சம்' என்று சார் உரத்த குரலில் பிரசங்கம் செய்வார். 'பிரபஞ்சம் மாயை, அபிராமியின் திருவடிகளே சத்தியம்' என்று சாரின் குரலைவிட உரத்த மௌனகுரலில் பித்தர் கர்ஜிப்பார். புலன்களால் ஓரளவு அறியக்கூடியதும், புலன்களைக் கடந்த நிலையில் பூரணமாக அறியக்கூடியதுமான பெருங்காதலெனும் சத்தியத்தை இருவருமே அறிய மாட்டார்கள்.

பித்தர்மீது பக்தி என்றால் அவரை வணங்கிவிட்டு என்னைத் தேடி வரலாமே? வாத்சல்யாவின் குடும்பகுரு அபிராமி பித்தர். அவள் பலமுறை அவரது பெருமைகளைப்பற்றி என்னிடம் பேசியிருக்கிறாள். அவற்றை அறியாப் பெண்ணின் பக்திப் பிதற்றல் என்ற அளவில்தான் பொருட்படுத்தினேன்.

என் ஆன்மீகத் தேடலின் எல்லைகள் தினமும் விரிந்து கொண்டிருந்தபோது, என்னோடு பட்டய கணக்கியல், அதுதான் சார்ட்டர்ட் அக்கவுண்டசி, படித்துக் கொண்டிருந்த சந்துரு 'பித்தர் புலன்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை தரவல்லவர் என்று சிலர் சொல்கிறார்கள்' என்றான். அவன் ஆன்மீக ஆர்வத்தோடு நல்லிலக்கிய ஆர்வமும் கொண்டவன் என்பதால், அவனது சமநிலை நோக்கின் மீதும், பொதுபுத்தி மீதும் நண்பர்கள் அனைவருக்கும் நம்பிக்கை உண்டு. கணியன் பூங்குன்றனாரின் பரமபக்தன்.



'வாத்சல்யாவிற்குத் தெரியாமல் அவரிடம் என்னை அழைத்துப் போ' என்று சந்துருவிடம் வேண்டினேன்.

'நானும் வருவேன்' என்றான் கரிகாலன். எங்கள் சிறுவயது சிநேகிதன். நாங்கள் வேலை பார்த்த பட்டய கணக்காளர் அலுவலகத்தில் மாத சம்பளத்திற்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தான். வாத்சல்யா மூலம் நான் வாங்கித் தந்த வேலை.

'மடத்தில் உனக்கென்ன வேலை?' என்று கேட்டேன்.

'அறிவாளிகள் அரசனின் உதவியோடு நிலங்களை அபகரித்துக் கொண்டு எங்களை அடிமைகள் ஆக்கினார்கள். ஆன்மீகவாதிகள் சாஸ்திரங்களின் உதவியோடு எங்களை பிறப்பிலேயே இழிந்தவர்களாக்கினார்கள். எங்களை தீண்டத்தகாத அடிமைகளாக்கிய இருவருமே எதிரிகள்தான். எதிரிகளை அறிவது அவர்களை வெல்வதற்கான முதல்படி' என்றான் கரிகாலன். தன் சாதி மக்களுக்கு உதவுவதற்காக பல காரியங்கள் செய்து வருகிறான்.

'அமாவாசை இரவில் அவரது மடத்திற்குப் போவோம்' என்றான் சந்துரு.

'ஏனப்படி?' என்று கேட்டேன்.

'அவரோடும், அவரது சிஷ்யக்கேடிகளோடும் சேர்ந்து இவன் பண்ணும் தப்பு, தண்டாவெல்லாம் மற்றவர் கண்ணில் படாமலிருக்கத்தான்' என்றான் கரிகாலன்.

'அமாவாசையன்று பௌர்ணமியை பார்க்க வேண்டாமா? அபிராமிக்கு உகந்த நாளாயிற்றே' என்றான் சந்துரு. அவன் சொன்னதன் பொருள் அப்போது எனக்குப் புரியவில்லை. அல்லது எந்தப் பொருளுமின்றி அப்படிச் சொன்னானா?

உடனே பித்தருக்குக் கடிதம் எழுதினான் சந்துரு. எதையும் முறைப்படிதான் செய்வான். முப்பது வருடம் பழகினாலும், முதன்முறையாக பழகுவதுபோல விலகி நின்றே பேசுவான். அவனது அந்தரங்க உலகிற்குள் யாரைத்தான் அனுமதிப்பானோ!

அபிராமி பித்தரிடமிருந்து வந்த பதில் கடிதம் கூட்டெழுத்தில் எழுதப்பட்டிருந்தது 'அன்பன் சந்துருவிற்கு, உன்னையும், உனது நண்பர்களையும் வரவேற்க அன்னை அபிராமி திருவுள்ளம்

கொண்டுவிட்டாள். வருகிற அமாவாசையன்று திருச்சியில் அடியவனிருக்கும் காவிரிக் குடிலுக்கு வந்துவிடவும். வேணும் சுபம். - அபிராமி பித்தன்'.

நாங்களிருந்த ஊரிலிருந்து திருச்சிக்கு நான்கைந்து மணி நேரத்தில் போய்விட முடியும். பித்தர் இரவு பதினோரு மணிக்கு மேல்தான் தியானத்தை ஆரம்பிப்பார். அமாவாசையன்று மாலைப் பேருந்தில் ஏறினோம். பயணித்துக் கொண்டிருந்தபோது பித்தரைப்பற்றிய பல கேள்விகள், மனதில் எழுந்து கொண்டே இருந்தன.

அமாவாசை இருளில் மூழ்கியிருந்த சாலையில், பேருந்து தன்னிரு முன்விளக்குகளால், தனக்கு வேண்டிய அளவிற்கு மட்டும் வெளிச்சம் ஏற்படுத்திக் கொண்டு திருச்சியை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. பேருந்து முன்னகர்ந்ததும், வெளிச்சமாக இருந்த பகுதி மீண்டும் இருளில் அமிழ்ந்தது. 'லௌகீகத்திலோ, ஆன்மீகத்திலோ மனிதனின் சுயமுயற்சி தற்காலிகமாக ஒளிதந்து முன்னகர வைத்தாலும், கர்ம இருள் இடைவிடாமல் பின்தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது' என்றேன்.

'மின்விளக்கு மனிதனின் படைப்பு. அவனால் தன் தேவைகள் தற்காலிகமாக பூர்த்தியாகும் அளவில் மட்டும்தான் எதையும் செய்ய முடிகிறது. சூரியன் இறைவனின் படைப்பு. அவன் உதித்துவிட்டால் முன்னும், பின்னும், மேலும், கீழும் எங்கும் இருளற்றுப் போய்விடுகிறது' என்றான்.

'பேசாமலிருங்களப்பா, மனிதன் தூங்க வேண்டாமா?' என்றான் கரிகாலன். அதன்பின் நான் வாத்சல்யாவின் நினைவுகளிலும், சந்துரு காளிதாசன் கற்பனைகளிலும் ஆழ்ந்தோம்.

இரவு பத்து மணியளவில் காவிரிக்கரையோரமாக இறங்கியதும் சந்துரு ஒரு பை நிறைய உயர்தர ஆப்பிள்கள் வாங்கி கொண்டான்.

'பித்தருக்கா?' என்று கேட்டேன்.

'இல்லை' என்றான் சந்துரு.

'குருவிற்கு காணிக்கை தருகிறோமோ இல்லையோ, சீடர்களுக்கு அவசியம் தந்தாக வேண்டும்' என்றான் கரிகாலன்.



காவிரியை ஒட்டி, லேசான குளிரில் நடுங்கியபடி இருட்டில் தட்டுத் தடுமாறி நடந்தபோது என் மனப்படகு இன்பநதியில் மிதந்தது. முன்பொரு நாள் இதே கரையில்தான் வாத்சல்யாவை முதன்முதலில் சந்தித்தேன். அருகே யாருமில்லாத தனிமையான சமயங்களில் பேரழகி கண்ணாடியில் தன்னழகை ரகசியமாக பார்த்து மகிழ்வது போல, வாத்சல்யாவை சந்தித்த தருணத்தை மனதிற்குள் பார்த்து மகிழ்வது என் வழக்கம்.

ஏதேதோ கற்பனைகளோடும், எதிர்பார்ப்புகளோடும் அரைமணி நேரம் நடந்து மடத்தை அணுகிய எனக்கு, பலத்த ஏமாற்றம் கிடைத்தது. மடத்தில் ஒரே ஒரு சீடரைத் தவிர யாருமே இல்லை. தூங்கிக் கொண்டிருந்தவர் எங்களது அகால வரவால் எரிச்சல் அடைந்தார். சந்துருவின் ஆப்பிள் பை அவரது எரிச்சலை விலக்கி, புன்னகையோடு கூடிய வரவேற்பை சம்பாதித்தது.

'பித்தர் துறவி அல்லவா? மடத்தில்கூட நிரந்தரமாக இருக்கக் கூடாது. அதனால் பஸ்ஸிலிருந்து இறங்கினீர்களே, அதற்கு அருகிலே இருக்கும் பொது சத்திரத்தில்தான் இன்று தங்குவார்' என்றார்.

'முன்பெல்லாம் குடில் போட்டுத் தங்குவாரே' என்றான் சந்துரு.

'அதெல்லாம் வேண்டாம். துறவிக்கு ஆடம்பரம் கூடாது என்று பித்தர் சொல்லி விட்டார்' என்றார் சீடர்.

மடத்தின் உட்புறமாக மாட்டப்பட்டிருந்த துறவி ஒருவரின் புகைபடிந்த படம் கண்ணில் பட்டது. 'இவர்தான் பித்தர்' என்றான் சந்துரு.

திரும்ப வந்த வழியே நடந்த போது 'என்னை பார்க்க பயந்து கொண்டு பித்தர் ஒளிந்து கொண்டுவிட்டார்' என்றான் கரிகாலன்.

சத்திரத்தை கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கவில்லை. புதிய சிந்தனைகளையோ, மனித முன்னேற்றங்களையோ அறியாத அல்லது அறிய முயலாத பழமைவாதி போல பல இடங்களில் பள்ளங்களும், ஓட்டைகளும் விழுந்திருந்த ஒரு பழையகாலத்து கட்டடம். இதிலா பித்தர் தங்குகிறார்?

சத்திர வாசலின் இருபுறமும் பெரிய திண்ணைகள் இருந்தன. அவற்றில் அங்கும், இங்குமாக சிலர் படுத்திருந்தனர். ஒரு

மூலையில், லாந்தர் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு நான்கைந்து பேர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். சந்துரு அவர்களிடம் சகஜமாகப் பேசியபோது அவர்கள் பித்தரின் சீடக்கோடிகள் — கரிகாலனின் பார்வையில் சீடக்கேடிகள் — என்பது புரிந்தது. சத்திரத்தின் வாயிலை ஒட்டி ஒரு சிறிய அறை இருந்தது. அது மூடப்பட்டிருந்தது.

‘கொஞ்சம் சீக்கிரமாக வந்திருக்கக் கூடாதா? இன்று அமாவாசை. பித்தர் அறைக்குள் சென்று தனிமையில் தியானம் செய்ய ஆரம்பித்து விட்டார். நாளை காலைதான் பார்க்க முடியும்’ சீட்டுகளிலிருந்து கண்களை எடுக்காமலே பேசினார் முதல் சீடர்.

‘போய் சாப்பிட்டுவிட்டு வந்து தூங்குங்கள். கடையை மூடி விடப் போகிறான்’ என்றார் இன்னொரு சீடர்.

சத்திரத்திற்கு அருகே இருந்த சிறிய உணவு விடுதி ஒன்றில் உண்டோம். களைத்து, பசியோடு இருந்ததால் உணவு மிகவும் சுவையாக இருந்தது.

சத்திரத்திற்கு திரும்பியதும், கிடைத்த இடத்தில் தளர்ந்து படுத்தோம். சீடர்களின் விளையாட்டை சற்று நேரம் கவனித்துக் கொண்டிருந்தேன். உறக்கம் கண்ணிமைகளை வருட ஆரம்பித்தது. வாழ்க்கையும் ஒருவகையான சீட்டாட்டம்தான். அதிர்ஷ்ட சீட்டு எப்போதாவதுதான் கிடைக்கும். அது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விளையாடிக் கொண்டே இருக்க முடியாது. கையில் இருக்கும் சீட்டுகளை கவனமாக கையாண்டால் வெற்றி பெற வாய்ப்புண்டு.

அப்போது மூடப்பட்டிருந்த அறைக்குள்ளிருந்து மெல்லிய இன்னிசையாக வளையோசையும், பெண்ணின் குரலும் கேட்டது. சீடர்களில் ஒருவர்கூட அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

சமூகத்தின், மதங்களின் முக்கியமான மனிதர்கள் பலரோடு பழகும் வாய்ப்பு எனக்கு பலமுறை கிடைத்திருக்கிறது. எனவே இதுபோன்ற ஒலிகள் எனக்குப் புதிதானவை அல்ல. புதிதல்ல என்பதால் புன்னகையோடு சீட்டாட்டத்தை அரைத்தூக்கத்தோடு தொடர்ந்து கவனிக்கலானேன்.



சந்துருவும் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் எதைத்தான் பொருட்படுத்தினான் இதைப் பொருட்படுத்த?

ஆனால், முதல்முறையாக மடத்திற்கு, சத்திரத்திற்கு, வந்திருந்த கரிகாலனுக்கு அது பேரதிர்ச்சியாக இருந்தது. அவன் சுபாவத்தில் நிதானமின்றி வேகமாக செயல்படுபவன். அது போதாதென்று, பொதுஇடத்தில் பொருத்தமற்ற செயல் எதைக் கண்டாலும் பொங்கி எழுந்துவிடும் சமூகப் போராளி. ’என்ன இது?’ என்று சற்று உரத்த குரலில் கேட்டான்.

‘அடுத்தவரின் அந்தரங்க வாழ்க்கைக்குள் நாம் தலையிட வேண்டாம்’ என்றான் சந்துரு.

‘அதெப்படி? அமாவாசை என்பதால் பித்தர் தனிமையில் இருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த இரவு நேரத்தில் மூடியிருக்கும் துறவியின் அறைக்குள்ளிருந்து பெண்குரல் கேட்கிறதே! இதுதான் தனித்துத் தவமிருப்பதா?’ கரிகாலனின் குரல் மேலும் உயர்ந்தது.

‘பேசாமலிரு’ என்றேன்.

ஆனால், என் பேச்சைக் கேட்கும் நிலையில் கரிகாலன் இல்லை. மீண்டும் அதே கேள்வியை எழுப்பினான்.

சீட்டு இன்னமும் சேராத மனச் சோர்வில் இருந்த சீடர் எரிச்சலுடன், ‘பித்தர் தனியாகத்தான் இருக்கிறார், உன் வேலையைப் பார்த்து கொண்டு போ!’ என்றார்.

அவர் வார்த்தைகளால் சீண்டப்பட்ட கரிகாலன் ‘யார் உள்ளே இருக்கிறார்கள், என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இப்போது எல்லோருக்கும் காட்டுகிறேன். அப்போதுதான் பொது மக்களுக்கு புத்தி வரும்’ என்று கோபத்துடன் கூச்சலிட்டபடி வேகமாக எழுந்து மூடப்பட்டிருந்த அறைக்கதவை நோக்கிப் பாய்ந்தான். அவனது உத்தேசம் என்னவென்பதை உணர்ந்ததும் அவனைத் தடுப்பதற்காக அவன்பின் நானும் பாய்ந்தேன். சந்துருவும் என்னைப் பின்தொடர்ந்தான்.

அதேசமயம் சீட்டு சேர்த்துவிட்ட சீடர், தன் கையிலிருந்த சீட்டுக்களை கீழே போடாமல், ‘அடேய் பாவி, நில்லுடா!’ என்று உட்கார்ந்தபடியே கூவினார். ஆனால், என்னை முந்திக்

கொண்டுவிட்ட கரிகாலன் கதவின்மீது கைவைத்து அதை பலமாகத் தள்ளினான். கதவு தாளிடப்படாமல் வெறுமனே சாத்தப்பட்டிருந்ததால் உடனே படீரென்று திறந்து கொண்டது.

அறைக்குள் நுழைந்துவிட்ட மூவரும் திகைத்து நின்றோம்.

அறை மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. மஞ்சள் நிற முட்டை மின்விளக்கு மெல்லிய ஒளி தந்து கொண்டிருந்தது. மலர்கள் எதுவுமின்றி பல்வேறு மலர்களின் கூட்டுமணம் அந்த அறையை நிரப்பியிருந்தது. அறையின் நடுவிலிருந்த நாற்காலியில் அமர்ந்து, சுவரைப் பார்த்துக் கொண்டிருந்த காவியுடை அணிந்த உருவம் மெல்ல தலை திருப்பி எங்களைப் பார்த்தது.

எங்களைப் பார்த்த உருவத்தின் முகத்தில், புகைப்படத்தில் நான் பார்த்த அபிராமி பித்தரின் சாயல் இருந்தது. ஆனால், முகம் பெண்ணின் முகமாக, புன்னகை தவழும் செவ்விதழ்களோடு, வழவழத்த பளிங்குக் கன்னங்களோடு இருந்தது. உடலோ இளம்பெண்ணின் மென்மையான கழுத்தோடு, சரிந்த தோள்களோடு, வளையல்கள் அணிந்த கரங்களோடு, மலர்ந்த மார்பகங்களோடு, சிறுத்த இடையோடு, பூரித்த பின்னழகோடு இருந்தது.

பெண்ணின் கையில் பேனாவும், ஒரு நோட்டுப்புத்தகமும் இருந்தன. பேனாவின் முனையைச் சுற்றி வானவில்லின் வண்ணவரிசையோடு ஓர் ஒளிவட்டம் இருந்தது. அறைக்குள் வேறு பொருட்களோ, அலமாரியோ, படுக்கையோ, மனிதர்களோ இல்லை. விரிந்து கிடக்கும் வரையற்ற விசும்பில் தனித்திருக்கும் ஒற்றை ஒளிச்சுடரென வெற்று அறையில் அப்பெண் இருந்தாள்.

குழப்பமடைந்துவிட்ட கரிகாலன், ‘வெளியே இருப்பவர் அறைக்குள் அபிராமி பித்தர் இருக்கிறார் என்று பொய் சொல்லி விட்டார். தவறு நடந்துவிட்டது, மன்னித்துக் கொள்ளுங்கள், மன்னித்துக் கொள்ளுங்கள்’ என்று பிதற்றிவிட்டு உடனே அறையை விட்டு வேகமாக வெளியேறினான்.

எனக்கு அப்பெண்ணின் கண்களில் பௌர்ணமி நிலவு தெரிந்தது. சந்துருவை மறந்தேன்.

எவரையும் எளிதில் பணிய எண்ணாத நான் அப்பெண்ணின் பாதங்களைப் பணிந்தேன்.



களுக்கென்று சிரித்த அம்மாதரசி பொன்னிற வானில் செந்நிற சூரியபந்து போல தன் நெற்றியில் துலங்கிக் கொண்டிருந்த குங்குமத்திலிருந்து சிறிது எடுத்து என் நெற்றியில் இட்டாள். ‘காத்திரு, காலையில் சந்திக்கிறேன்’ என்று மிகவும் இனிமையான குரலில் கூறினாள்.

தலையை உயர்த்தி, மண்டியிட்ட நிலையில், அசையாமல் எதுவும் பேசத் தோன்றாமல் இருந்தேன். ‘பிடிவாதக்காரா!’ என்ற அப்பெண் தன் வலது பாதத்தை எடுத்து, என் நெஞ்சில் பதித்து முறுவலித்தாள். திருவடி தீண்டிய என்னிதயம் அள்ளப் பெருகும் ஆனந்தத்தின் பிறப்பிடமாக மாறியது. அத்திருமுகத்தில் எவரது சாயலும் இப்போது தென்படவில்லை.

‘இதுவரை எவரும் அறிந்திராத பார்வை, அறியவே முடியாத பார்வை அல்ல. இதுவரை எவரும் பார்த்திராத முகம் பார்க்கவே முடியாத முகம் அல்ல. இதுவரை எவரும் கேட்டிராத குரல் கேட்கவே முடியாத குரல் அல்ல’ என்று தோன்றியது.

அப்பெண் கன்னங்குழிய புன்னகைத்தாள்.

சிறிது நேரம் அப்பூரண நிலவு முகத்தை, அமுதூறித் ததும்பும் விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பின் எழுந்து அறையை விட்டு வெளியேறினேன். வெளியேறும்போது கதவை ஓசையின்றி சாத்தினேன்.

உள்ளே கண்டதைவிட, வெளியே கண்டது ஆச்சரியமாக இருந்தது. களேபரம் நடந்ததற்கான அறிகுறி எதுவுமே இல்லை. சீட்டு சேர்த்த சீடர், குதித்தோடிய கரிகாலன் உட்பட அனைவரும் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். சந்துரு அரைகுறை தூக்கத்தில் புரண்டு கொண்டிருந்தான். நான் தூங்குகிறேனா அல்லது கனவு காண்கிறேனா என்று புரியாத மயக்க நிலையில் இருந்தேன்.

திண்ணையும், சுவரும் சேரும் மூலையில் சிறிது இடமிருந்தது. அங்கே சென்று தள்ளாடி சாய்ந்ததும், உடனே நானும் உறங்கி விட்டேன்.

காலையில் சூரியனின் இளம்வெயில் கரங்கள் என்னைத் தொட்டு முகத்தை வருடியபோதுதான் கண்விழித்தேன். சீடர்கள்

எவரையும் காணவில்லை. பித்தர் அதிகாலையிலேயே சென்று விட்டார் என்று ஊகித்துக் கொண்டேன். எழுந்து உட்கார்ந்திருந்த சந்துரு முகம்கூட கழுவாமல் ஏதோ தடிமனான நாவலை வாசித்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த கரிகாலனை உலுக்கி எழுப்பினேன்.

கைகளை உயர்த்தி, உடலை முறுக்கி சோம்பல் நீக்கிக் கொண்ட கரிகாலன், 'அசந்து தூங்கி விட்டோம். நேற்று அளவுக்கதிகமாக அலைந்துவிட்டோம்' என்றான்.

'இது நேற்றைய அலைச்சல் இல்லை. பல ஜென்மத்து அலைச்சல். வழி பிறந்து விட்டது என்று தோன்றுகிறது' என்றேன்.

சந்துரு பதில் பேசாமல் லேசாக தலையை அசைத்தான். அவன் என்ன சொல்ல உத்தேசிக்கிறான் என்று எனக்குப் புரியவில்லை.

'என்னடா உளறுகிறாய்?' என்றான் கரிகாலன்.

'நேற்றிரவு என்ன நடந்தது?' என்று கேட்டேன்.

'சத்திரத்திற்கு வந்ததும், பித்தரை நாளைக்குத்தான் பார்க்க முடியும் என்று அவரது சீடர்கள் சொன்னார்கள். அதனால் தெரு முனையில் இருக்கும் உணவு விடுதியில் சாப்பிட்டுவிட்டு திரும்பி வந்து உடனே படுத்துறங்கி விட்டோம்' என்றான் கரிகாலன்.

'வேறொன்றும் நினைவில் இல்லையா?' என்று கேட்டேன்.

'ஏனில்லை? நேற்று இரவு சாப்பிட்ட கொத்து பரோட்டாவையும், பட்டாணி குருமாவையும் இந்த ஜென்மத்தில் மறக்க முடியுமா?' என்று உணர்ச்சிவசப்பட்டு நா தழுதழுக்கக் கூறினான் சந்துரு.

என் நெற்றியைத் விரல்களால் தேய்த்துவிட்டேன். விரல்களைப் பார்த்தபோது அவற்றில் லேசாக குங்குமத் தீற்றல் இருப்பது போலத் தோன்றியது.

'நேற்றிரவு ஏதேதோ நடந்ததே?' என்றேன்.

'ஏதாவது கெட்ட கனவு கண்டிருப்பாய்' என்றான் கரிகாலன்.

'இருக்கும், இருக்கும்' என்றான் சந்துரு.

'ஏன் நல்ல கனவாகக்கூட இருக்கலாமே' என்றேன்.



'இருக்கலாம், இருக்கலாம்' என்றான் சந்துரு.

'இந்த இடத்தில் மனிதனுக்கு நல்லது எப்படியடா நடக்கும்?' என்றான் கரிகாலன்.

சிறிது நேர மௌனத்திற்குப்பின் கரிகாலனிடம், 'நீ சென்னையில் வீடு வாங்குவதற்காக போன வருஷம் உனக்கு பணம் தந்தேனே' என்றேன்.

அதுவரை மலர்ந்திருந்த கரிகாலனின் முகம் வாடியது. 'ஊரில் இருக்கும் பூர்வீக நிலத்தை விற்று ஆறு மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்து விடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால், அது எங்கள் நிலமே இல்லை என்கிறார்கள். கடன் விஷயத்தில் நாம் நினைக்கிறபடி எதுவும் நடப்பதில்லை' என்று மன்னிப்பு கோரும் குரலில் பேசினான் கரிகாலன்.

'நீ எதையும் விற்க வேண்டாம். நான் தந்த பணத்தைத் திருப்பித் தரவும் வேண்டாம். அதை மறந்து விடு' என்றேன்.

என்னை விசித்திரமாகப் பார்த்த கரிகாலன், 'வருத்தப்படாதேடா வம்சி. கூடிய சீக்கிரம் கொடுத்து விடுகிறேன்' என்றான். அவன் குரலில் அவநம்பிக்கை தொனித்தது.

'நான் உண்மையாகத்தான் சொல்கிறேன். அந்தப் பணம் இனி உன்னுடையது. உனக்கு சந்தேகமாக இருந்தால் சந்துருவை சாட்சியாக வைத்து எழுதியே கொடுக்கிறேன்' என்றேன்.

'தொகை மிகவும் பெரியது, பதிலுக்கு உனக்கு நான் என்ன செய்யப் போகிறேனோ!' என்றான் கரிகாலன்.

'ஏற்கனவே செய்துவிட்டாய்' என்றேன்.

'நான் ஒன்றும் செய்யவில்லையே? இன்று உனக்கு ஏதோ ஆகிவிட்டது' என்றான் கரிகாலன்.

'நான் எந்த வழியில் போக வேண்டும் என்று எனக்குப் புரிவது போலிருக்கிறது. சந்துரு, நீ ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?' என்று கேட்டேன்.

'அட போப்பா, எவருடைய உதவியும் இல்லாமல் நாயகி இருக்கும் இடத்தை அரும்பாடுபட்டு கதாநாயகன் கண்டுபிடிக்கும் சுவாரஸ்யமான அத்தியாயத்தை வாசிக்கும்போது, ஏதேதோ

கேட்கிறாய்' என்று கூறிவிட்டு மீண்டும் நாவலில் ஆழ்ந்துவிட்டான் சந்துரு.

'நண்பனோடு பேச முடியாத அளவிற்கு சுவையான நாவலோ?' என்று கேட்டான் கரிகாலன்.

'இந்த அத்தியாயம் நன்றாக இருக்கிறது என்பதால் முழுநாவலும் சுவையாக இருக்கிறது என்று சொல்ல முடியாதே. எல்லாவற்றையும் வாசித்துவிட்டு அப்புறம் சொல்கிறேன்' என்றான் சந்துரு. சொல்ல நினைத்ததை தெளிவாகச் சொல்லிவிட்டான்.

'ஒரு மனிதர் இன்னொரு மனிதராக மாற முடியுமா?' என்று கேட்டேன்.

'வேஷம் போட்டுக் கொண்டால் அது முடியும். திரைப்படங்கள் எல்லாமே அப்படித்தானே உருவாக்கப்படுகின்றன?' என்றான் கரிகாலன்.

'நேற்றிரவு பித்தர் பெண்ணாக மாறியிருந்தார்' என்றேன்.

'அனுமன் சாதகம் செய்யும்போது ராமகிருஷ்ணர் வானரம் போல நடந்து கொள்வாராம். தன்னைப் பெண்ணாக பாவித்து இறைவனுக்கு அர்ப்பணிப்பது யோகப்பயிற்சிகளில் ஒன்று என்று எதிலோ வாசித்திருக்கிறேன்' என்றான் சந்துரு.

'பாவனையைப்பற்றி நான் பேசவில்லை உடலே மாறியிருந்தது. ஒன்று மற்றொன்றாக ஜடத்தில் மாற முடியுமா?' என்று கேட்டேன்.

'எதை இடைவிடாமல் நாடுகிறோமோ அதுவாக மாறுகிறோம் என்பது நம் இந்திய ஆன்மீக ஞான வழியில் உள்ள சாதாரணமான பாடம்தானே?' என்றான் சந்துரு.

'மனிதன் கடவுளாக மாற முடியுமா?' என்று கேட்டேன்.

'கடவுள் மனிதனாக மாறியிருந்தால், அது நடக்க முடியும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். எனக்குத் தெரியாது' என்றான் சந்துரு.

'எதை கேட்டாலும் தெரியாது என்றுதான் சொல்கிறாய். உனக்கு என்னதான் தெரியும்?' என்று கேட்டேன்.

'எல்லாமாக நான் இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன் என்பது தெரியும். இருத்தலில் இன்பம் என்பது மட்டுமே நான் எனக்காக



ஏற்றுக் கொண்ட வழி' என்றான் சந்துரு. அவன் உண்மையாக சொன்னானா, வேடிக்கையாக சொன்னானா என்பது அவனுக்குத்-தான் தெரியும்.

'பிரம்மத்தைப்போல பேசுகிறாய், அடக்கம் அதிகமாகி விட்டது!' என்றேன்.

'எங்கும், எதிலும் தன்னைத் தவிர வேறெதையும் பார்க்க முடியாத பிரம்மம்தான் உலகில் ஆகப் பெரிய அகம்பாவி என்று ஸ்ரீ அரபிந்தோ சொல்கிறாரே' என்றான் சந்துரு.

'அவர் நகைச்சுவைக்காக அப்படி சொல்லியிருப்பார். அதை விடு. என் அனுபவம் எனக்கு உண்மையாக இருக்கிறது. அமாவாசையன்று பௌர்ணமியைப் பார்த்து விட்டேன்' என்றேன்.

'பௌர்ணமி ஒருபோதும் சூரியனாக முடியாது என்பது பொதுபுத்தி' என்றான் சந்துரு.

நான் கண்டது கனவா? கற்பனையா? மனப் பிறழ்வா? மாயத் தோற்றமா? காட்சிப் பிழையா? தோற்றத் தவறா? நான் கண்ட காட்சியைப்பற்றி சந்துருவிடம் பேச முனைந்தபோதெல்லாம், வேறெதைப் பற்றியாவது பேசி, பேச்சை தளுக்காக திசை திருப்பிவிடுவான்.

அதற்குப்பின் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. ஆனால், புலன்களுக்கு அப்பாற்பட்டவை உண்டு என்பதை அன்றிரவு அனுபவ அறிதலாகப் பெற்றேன். பல நூறு பக்க விளக்கம் தர முடியாத ஞானத்தை கணநேர நேரடி அனுபவம் நிரந்தரமாகத் தரமுடியும் என்று அன்று கண்டு கொண்டேன்.

அபிராமி பித்தரை விட்டு இப்போது விலகி விட்டாலும், அவர் மூலம் நான் பெற்ற அனுபவம்தான் என் ஆன்மீக வாழ்வின் முக்கிய திருப்புமுனை.

அவரருகே சென்று வணக்கம் சொல்லிவிட்டு அப்படியே வாத்சல்யாவைப் பாராதது போல நகர்ந்துவிடலாமா என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது கரிகாலன் வாத்சல்யாவை நோக்கி வேகமாக நகர்வதைப் பார்த்தேன்.

(வளரும்)

அன்னை இலக்கியம்

## நல்லதோர் வீணை செய்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

என்ன விந்தையிது? இன்று இவள் ஆர்வமாய் காத்திருந்த போது, அவள் திரும்பாமலே சென்றாள். நினைவு தெரிந்த நாளாய் இவள் அம்மா வசிக்கும் அந்தப் பகுதிக்குப் போனதில்லை. ஒருநாள் அம்மா மயங்கி விழுந்தபோது மடியில் தாங்கினாளே அதோடு சரி. அதையும் கடமையே என்றுதான் செய்தாள். ஆனால், இன்று அம்மா தன்னிடம் வந்து பேசமாட்டாளா என்கிறது மனம்.

சுமதியின் மனம் வழக்கம் போல், உள்ளே நுழைந்ததும், மகளிருக்கும் அடுத்த பகுதியை எண்ணியது. மகளின் இனிய முகம் காண ஏங்கியது. ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக அவள் தன் மனத்தை அடக்கிச் சுருட்டிக்கொண்டு அடுத்த பகுதியைத் திரும்பியும் பாராது போய்விட்டாள்.

என்ன விந்தையான மனமிது? ஆர்த்தி சோர்ந்து போய் உள்ளே திரும்பினாள். படுக்கை கொள்ளவில்லை. மனம் அமைதியிழந்து தவித்தது. படிக்கும் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்ட வண்ணம், நல்லதோர் வீணை செய்து இசைக்கத் தொடங்கி உணர்ச்சி வசப்பட்டாள். மெய்மறந்து பாடியவள் டேபிள்மீது கவிழ்ந்து அப்படியே உறங்கிப் போனாள். இரண்டு நாட்களாய் உள்ளெழுந்த போராட்டம் அவளை அலைக்கழித்ததால் உடம்பு சுட்டது.

திடீரென கண்விழித்த சுபா, அருகில் படுக்கைக் காலியாயிருந்தது உணர்ந்து, அதிர்ந்து எழுந்து தேடினாள். மணி மூன்று இருக்கும். இப்போது எழுந்து எங்கு போயிருப்பாள். இரண்டு நாட்களாகவே உள்ளூர அதிர்ந்து போயிருந்தாள். வேடிக்கை பாராமல், விஷயத்தை விளக்கியிருக்கலாமோ என்று கவலையுடன் படிக்கும் அறைக் கதவைத் திறந்தவள், ஆர்த்தி டேபிள்மீது கவிழ்ந்து கிடந்ததைப் பார்த்து திடுக்கிட்டாள். ஐயோ, விளையாட்டாக இருந்து விட்டேனே. குழந்தையைக் கலங்க



விட்டு வேடிக்கை பார்த்து விட்டேனோ? நான்தான் குற்றவாளி. குழந்தை பாவம் சோர்ந்து போய் விட்டாள் என்று சுபாவின் மனம் தவித்தது.

மெல்ல அவள் தலையை நிமிர்த்தி 'ஆர்த்தி!' என்று மெல்லிய குரலால் அழைத்தாள்.

'அம்மா!' என்று தீனமாய் முனகினாள் ஆர்த்தி. உடம்போ அனலாய்ச் சுட்டது. அவளைத் தாங்கி படுக்கைக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தாள். சுமதியிடம் ஓடிவந்து எழுப்பினாள். இப்போது சுமதி கல்லாகி விட்டிருந்தாள்.

'என்ன சுபா இது? அவளுக்கு உடம்புக்கு வந்தால் நீயே டாக்டரை அழைத்துக் காட்டக் கூடாதா? நான் வந்தால் அவளுக்கு அதிகமாகிவிடும்' என்றாள்.

வாய் பேசாது திரும்பிய சுபா, டாக்டருக்குப் போன் செய்து வரவழைத்தாள். வந்து பார்த்த டாக்டர் காய்ச்சலுக்கு மருந்து கொடுத்தார். 'தேர்வுக்காக உடலையும், மனதையும் வருத்தியிருப்பாள். சின்னப்பெண் தாங்க முடியவில்லை' என்று ஒரு காரணமும் கூறிச் சென்றார்.

தேர்வு முடிந்து வெளியூர் போய், கொள்ளையாய்ச் சிரித்து, கொண்டாடி மகிழ்ந்ததும், வேண்டாதவள் என ஒதுக்கிய தாயைத் தேடி அலைந்ததும் அவளுக்கல்லவா தெரியும்.

மருந்து, மாத்திரைகளை, ஹார்லிக்ஸை பார்த்துப்பார்த்து கொடுத்தாள் சுபா. ஆர்த்தி கொடி போல் துவண்டு கிடந்தாள் படுக்கையில். சுபா துன்பம் தாளாது தனிமையில் அழுதாள். கடவுளை வேண்டினாள்.

ஆர்த்தி மாத்திரையும், ஹார்லிக்ஸும் படுத்த நிலையில் பாதி உறக்கத்தில் சாப்பிட்டு அயர்ந்து தூங்கினாள்.

இவளை யார் பொறுப்பில் விட்டுவிட்டு கோயிலுக்குப் போவது? கடவுள் கருணையினால்தான் ஆர்த்தி நலமாக முடியும் என்று தீவிரமாய் நினைத்தாள். கடவுளை நம்பி தனியே விட்டுவிட்டு அரைமணியில் வந்துவிடலாம் என்று ஒரு எண்ணம். பாழும் மனம், மனிதர்களை நம்பும் அளவு கடவுளை நம்புவது இல்லையோ! மீண்டும் சுமதியிடம் சென்றாள்.

சுமதியோ இரண்டு நாட்களாய் அறையில் அடைபட்டுக் கிடந்தாள். வேலை செய்ய வரும் பணியாளர்களிடம் தனக்கு உடம்பு சரியில்லை என்றும் தன்னைத் தொந்திரவு செய்ய வேண்டாமென்றும் எச்சரித்திருக்கிறாள். அவள் கணவரும் ஊரிலில்லை.

குழந்தையைப் புறக்கணித்தேனோ என்ற மனவுளைச்சல் வேறு. இந்நிலையில் சுபா வந்தாள்.

சுமதி, குழந்தைக்கு இரண்டு நாட்களாய் உடம்பு சரியில்லை. மாத்திரை கொடுத்திருக்கிறேன். அயர்ந்து உறங்குகிறாள். கோயிலுக்குப் போய் கடவுளிடம் பிரார்த்தனை செய்து வரத் தோன்றுகிறது. 'அரைமணி நேரத்தில் வந்து விடுவேன். தயவு செய்து கொஞ்சம் பார்த்துக்கொள் சுமதி' என்று கெஞ்சினாள்.

'சரி சுபா. உனக்காகத்தான் ஒப்புக் கொள்கிறேன். அவள் கண் விழிக்கும்முன் வந்து விடு' என்று கூறி ஆர்த்தியிருக்கும் அந்தப் பகுதிக்குப் புறப்பட்டாள். 'அவுட் ஹவுஸுக்குப் போன் செய்து யார் வந்தாலும் இப்போது பார்ப்பதற்கில்லை என்று சொல்லிவிடச் சொன்னாள்'.

படுக்கையில் கிழிந்த நாராய்க் கிடந்தாள் ஆர்த்தி. பெற்ற வயிறு கலங்கியது. பாசத்தால் மனம் துடித்தது. 'ஐயோ மகளே! எத்தனை தவம் கிடந்து ஈன்றேன். இப்படி அந்நியமாய் விட்டு விடவோ உன்னைப் பெற்றெடுத்தேன்' என்று உள்ளம் புலம்பியது. பச்சைக் கொடியை யாரோ இரக்கமின்றி பறித்து எறிந்து விட்டது போல் கிடந்தாள் குழந்தை. மெல்ல அவளருகில் வந்தாள் சுமதி. அவள் பக்கத்தில் உட்காரக் கூடப் பயமாக இருந்தது. திடீரென விழித்துக்கொண்டு விடுவாளோ? தன்னைப் பார்த்தால் என்ன ஆவாளோ என்றெல்லாம் அஞ்சிக் கொண்டிருந்தாள். காய்ச்சல் வேகத்தில் முனகுகிறாள். மெல்ல பக்கத்தில் உட்கார்ந்தாள். புரண்டு படுத்த ஆர்த்தி மெல்ல தன் காலை அவள் மடிமீது போடுகிறாள். பாசத்தில் சுகமாயும், பயத்தில் கனமாயும் உணர்ந்தாள் சுமதி. மெல்ல தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவளை வருடிக் கொடுத்தாள். இதமாக இருந்திருக்கும் போலும். கண்விழிக்காமலேயே முனகுகிறாள். 'அம்மா' என்றல்லவா சொல்கிறாள்.



'ஆர்த்தி!' என்று பாசம் பொங்க அழைக்கிறாள் சுமதி. கண்ணைத் திறவாமலேயே தன்னைத் தடவிக் கொடுக்கும் கையைப் பற்றிக் கொள்கிறாள். கண்கலங்கி உட்கார்ந்திருந்தாள் சுமதி. 'அம்மா' என பலகீனமாய் அழைத்தாள் ஆர்த்தி.

'ஆர்த்தி! நான் அம்மா வந்திருக்கேனடா' என்று மெல்லக் கூறினாள். இலேசாய்க் கண் திறந்தவள் முகம் மலர்ந்தாள். கனவா? நனவா?என்று திணறினாள் சுமதி.

'அம்மா நீயா?' என்றாள் அதில் ஆர்வம், அன்பு யாவுமிருந்தது.

'ஆமாண்டா, நான்தான். உன்னம்மாதான்'. 'உங்கிட்ட ஒண்ணு கேக்கணும்மா' என்றாள் ஆர்த்தி.

'உடம்பு குணமாகட்டும். நிறைய கேள். எது கேட்டாலும் சொல்கிறேன்' என்று அன்புடன் கூறினாள்.

'இதைக் கேட்டாலே குணமாகிவிடுவேனம்மா' என்றாள். அத்தனை பலவீனத்திலும் ஆர்வம் குறையாமல்.

'நீ குணமாகி நன்றாக இருந்தால் அதுவே போதும் கேளடா. என்ன கேட்க வேண்டும்?' என்று அவள் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு அணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

'நீ என்னைக் கருவில் சுமந்தபோது எப்படியம்மா இருந்தாய்?' என்றாள்.

'திரைப்படத்துறையை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு ஓராண்டுகாலம் ஒரு புனிதமான சூழலில் போயிருந்தேன்'.

'ஏன் அப்படியிருந்தாய்?'

'என் குழந்தை தூய தெய்வீகச் சூழலில் உருவாகி வளர வேண்டும். என் வாழ்வின் மாசுகள் என் குழந்தை மீது வீசக்கூடாது என்று ஆசைப்பட்டேன். அதனால்தான், இந்தத் தொழில் இது தொடர்பான மனிதர்கள், பேச்சுகள் யாவற்றையும் தவிர்த்துப் புராணப் படங்களில் முனிவர்களின் பர்ணகசாலையில் பாது-காக்கப்படும் கர்ப்பிணிப்பெண் போல் ஒரு தூய சூழ்நிலையில் இருக்க ஆசைப்பட்டேன். கருவில் திருவைச் சுமக்க ஆசைப்படும் பெண் பேறுகாலத்தில் தூய சிந்தனை, தூய செயல் என்றிருந்தால் பிறக்கப்போகும் குழந்தைக்கு நல்லது என்று அறிந்து அப்படிச் செய்தேன்' என்றாள் சுமதி.

‘எப்படியாவது என்னைப் பெற்றெடுக்க ஏனம்மா ஆசைப்பட்டாய்?’ என்றாள் ஆர்த்தி.

‘என்ன செய்வது ஆர்த்தி? மணமான பெண் ஒரு குழந்தைக்கு ஏங்குவது இயல்புதானே. தனக்கென தன் ரத்தம், தன் மூச்சு என ஒரு குழந்தைக்கு ஆசைப்படும் சமூதாயத்தில்தானே நான் உருவானேன். ஆனாலும் முதலில் கருவைக் கலைத்து விடத்தான் எண்ணினேன். குழந்தை வேண்டும் என்ற தணியாத ஆவல் ஒருபுறம். நாள்தோறும் தொழிலில் சந்திக்கும் அவலங்களால் ஏற்படும் பாதிப்புகளை எண்ணி குழந்தை எப்படியிருக்குமோ என்ற தடுமாற்றம் ஒருபுறம். முடிவாக கருவைக் கலைப்பது என்று தீர்மானித்து, என் நெருங்கிய சிநேகிதி டாக்டர் தேவிக்குப் போன் செய்தேன். அப்போது டாக்டர் தேவி, தனக்குத் தெரிந்த ஒரு தெய்வீகமானவர் அங்கு வந்திருப்பதாகவும், அவருடன் மனம் விட்டுப் பேசினால் தெளிவு ஏற்படும், பிறகு முடிவு செய்யலாம், அவசரப்பட்டுக் கருக்கலைப்புச் செய்ய வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொண்டார். அத்துடன் அந்தத் தெய்வீகமானவரைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்தாள்’.

‘ஏதோவொரு முதிய பெண்மணியைச் சந்திக்கப் போகிறோம். காவியுடுத்தி கமண்டலம் ஏந்தி, ஜபம் செய்து கொண்டிருப்பார். கமண்டல நீரை என் தலைமீது தெளித்து என் துன்பங்களைப் போக்குவார். மந்திரம் ஜபித்து என் மனத்தைப் படம் பிடிப்பார் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டு போனேன்’.

‘ஆனால் ஓரிளம் பெண்ணாக இருந்தார் அந்தத் தெய்வீகர். கண்ணில் கருணையுடன், எதிரே நிற்பவரின் தீமையை எரித்துவிடும் ஒளியும் சுடர்விட்டது. தோற்றத்தில் எளிமை இருந்தாலும் தெய்வீக அழகிருந்தது. போலிச் சொற்கள் ஏதுமின்றி இதயம் ஒன்றி இருகரம் குவித்தேன். பதிலுக்கு வணக்கம் தெரிவித்தார்’.

‘என்ன பிரச்சனை என்று கேட்டாள்?’

‘என் தொழில், தவிர்க்க முடியாத சில அவலங்களால் என் மனம் கலங்கியிருப்பதையும் அதனால் கருவைச் சுமக்கத் தைரியமில்லாததையும் கூறினேன்’.



‘என்ன தொழில் செய்கிறேன் என்று கேட்டார். அப்போதுதான் நான் பிரபல திரையுலகத் தாரகை என்பதை அவர் அறிந்திருக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்’.

‘நீங்கள் திரைப்படம் பார்த்ததில்லையா?’ என்று கேட்டேன்.

‘என் வாழ்வில் பொழுது போக்குகளுக்கு இடமில்லை’ என்றாள் புன்னகை மாறாமல்.

‘அந்தத் தகுதியே எனக்கு அவளிடம் மனம் விட்டுப் பேசப் போதுமானதாயிருந்தது. என் துன்பங்களைச் சொன்னேன். நல்ல உள்ளத்தோடு பரசுராம் என்னை மணந்ததைச் சொன்னேன். மண வாழ்வின் பரிசாக உன்னை உண்டானதைச் சொன்னேன். ஆனால் மனதில் அமைதியில்லாத போராட்டத்தைச் சொல்லி இச்சூழலில் உருவான குழந்தை எப்படியிருக்குமோ என்ற என் அச்சத்தைக் கூறிக் கருவைக் கலைக்கத் துணிந்ததைச் சொன்னேன்’.

‘இக்கரு நல்ல முறையில் வளர்ந்து ஆரோக்யமான உள்ளமும், உடலும் கொண்ட குழந்தை பிறந்தால் உனக்கு அதில் மறுப்பில்லையே’ என்றாள்.

‘மறுப்பில்லை, எனக்குக் குழந்தை வேண்டும். ஆரோக்யமான மனமும், உடலும் கொண்ட நல்ல குழந்தை வேண்டும் என்று ஆவேசமாய் அழுதேன்’.

உடனே அவள், ‘குழந்தைக்கு முக்கியத்துவம் தருவதானால் உன் தொழிலைத் தற்காலிகமாகவாவது ஒதுக்கிவிட்டு என்னுடன் கிளம்பு. தூய சூழலில் திடமான குழந்தையைப் பெற்றெடுப்பாய்’ என உறுதியாகச் சொன்னாள்.

‘அவள் கூறியபடி எல்லாவற்றையும் விட்டு விலகி உனக்காக அவளுடன் சென்று ஒரு தவவாழ்வு வாழ்ந்தேன். கடந்த காலத்தைத் துடைத்தெறிந்துவிட்டு, புத்தம்புது ஜீவனாய் என்னுள் கருக்கொண்ட உன்னைப்பற்றிய உயரிய சிந்தனையுடனேயிருந்தேன். வளையல்காப்பு, சீமந்தம், என்ற எவ்வித சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு புதிய அனுபவங்களுடன் சந்தோஷமாயிருந்தேன். அடிவயிற்றில் உன் பிஞ்சுக் கால்கள் உதைப்பதை அனுபவித்தேன். வேறு சிந்தனையே இல்லை. கருவுற்ற பெண்ணுக்கு ஏற்படும் தலை-

சுற்றல், வாந்தி, கால்வலி, இடுப்புவலி, என்று எது வந்தாலும் அங்கு மருந்து மாத்திரை எதுவும் இல்லை. எல்லாவற்றிற்கும் ஒரே மருந்து ஒரு புத்தகம். அதை வைத்துப் படிப்பாள். உண்மை-யிலேயே அதைப் படித்தால் எந்த நோயும் விலகுவதை நான் அனுபவித்தேன். அது என்ன புத்தகம் என்றால் அது ஒரு மகானின் மந்திரமொழி என்று மட்டும் சொல்வாள். அதை ஒரு பூஜைப் பொருள் போல் பாதுகாப்பாள். அதனால் அதை நான் எடுத்துப் பார்த்ததில்லை'.

'அவள் இருந்த வீட்டை அளவு கடந்த தெய்வ சாந்நித்யத்தால் நிரப்பியிருந்தாள். எனக்கு அங்கிருந்தவரை கவலை, பயம் எதுவும் ஏற்பட்டதில்லை. அமைதி, மகிழ்ச்சி, உன் வரவின் எதிர்பார்ப்பு இவற்றுடன் நிம்மதியாய் இருந்தேன். நீ பிறந்து ஒரு மாதம்வரை அங்குதானிருந்தேன். அந்தப் பெண் உன்னைத் தூக்கிக் கொஞ்சுவாள். உன் சிரிப்பில், அழுகையில் தெய்வத்தைப் பார்க்கிறேன் என்பாள். நான் புறப்பட்டதும் அவள் அந்தப் பிரிவிற்கு வருந்தவில்லை. சாந்தமாக நம்மை அனுப்பி வைத்தாள்'.

'இங்கு வந்தவுடன், என் தொழில் காற்றுக்கூட உன்மீது படாமல் வளர்க்க ஆசைப்பட்டுத்தான் சுபாவிடம் உன்னைக் கொடுத்தேன். மற்றபடி உனக்கு நான் எவ்விதக் கெடுதலும் செய்யவில்லை. அடுத்தடுத்து படப்பிடிப்பு. மனமும், உடலும் அலுத்துப் போய் வருவேன். நீ குழந்தை. நான் உன்னைப் புறக்கணித்து என் பெருமையில் கண்ணாயிருந்ததாய் நினைத்து என்னை வெறுத்தாய். விரைவில் இந்தத் தொழிலை விட்டுவிட்டு என் மகளுடன் வாழத்தான் ஆசைப்பட்டேன். ஆனால் விதி வேறு விதமாய் அமைந்துவிட்டது. நீ என்னைக் கண்டாலே வெறுத்து ஒதுக்கினாய்' என்று கூறும் போதே அவள் கண்ணீர் ஆர்த்தியின் கையில் விழுந்தது.

'அம்மா! உண்மையில் நீ என்னைப் பெரியம்மாவிடம் கொடுத்து வளர்த்ததில் எனக்கு வருத்தமில்லை. பள்ளிக்கூடத்தில் மற்றவர்கள் உன்னைப் பற்றி நீ நடிக்கும் விதத்தைப் பற்றி அசிங்கம் அசிங்கமாய் பேசினார்கள். அது விஷவித்தாய் என் மனதில் விழுந்து உன்மீது வெறுப்பாய் வளர்ந்து விட்டது.



அவர்கள் பேச்சைக் கேட்டு வேதனைப்பட்டேனே தவிர உன்னிலையை ஒரு நாளும் பொருட்படுத்தவில்லை. அம்மா! நீ உண்மையிலேயே என்னை நேசிக்கிறாயா?' என்றாள் ஆர்த்தி.

'ஆர்த்தி! இதென்னடா கேள்வி? உன்னை வெளியூர் அனுப்புமுன் உன்னை இனி மறந்துவிட வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் இன்று உன் அன்பின் ஒருதுளி என்னை இழுக்கிறது. என் மகளை இழக்க எனக்கு மனமில்லை' என்று கதறினாள் சுமதி.

'அப்படியானால் இன்றிலிருந்து நீ நடிப்புத் துறையை விட்டுவிடுவாயாம்மா?' என்றாள்.

'உனக்கு அதுதான் மகிழ்ச்சி என்றால் விட்டுவிடுகிறேன்' ஆர்த்தி என்றாள்.

'அம்மா! நான் கலையை நேசிப்பவள்தான். கலையென்ற பேரால் மனித சமூதாயத்தை அழிப்பது எனக்கு உடன்பாடில்லை. வளரும் பருவத்துக் குழந்தைகள் வக்கிரத்தில் விழுந்து மனம் அழுகினால் எதிர்காலம் எப்படியிருக்கும். வெளியே போனால் ஒரு சிலர் பேசும் பேச்சு தாங்கிக்கொள்ள முடியவில்லையம்மா. எதிர்கால பூகம்பம் போகிறது பார் என்று என்னை கேலி செய்யும் போது அவமானமாயிருக்கிறது அம்மா', என்று உணர்வு பூர்வமாய்ப் பேசினாள் ஆர்த்தி.

ஒரு பதினைந்து வயதைக் கடக்கும் நிலையில் உள்ள பெண் சமூதாயத்தின் அழிவிற்குத் தன் தாய் காரணமாவதை எண்ணி வேதனைப்பட முடிகிறதென்றால் அவள் எவ்வளவு பொறுப்பு வாய்ந்த பெண். இவளைக் கருவில் சுமந்து ஆனந்தமாய் வசந்தியுடன் தங்கியிருந்தபோது வசந்தி ஓர் ஆன்மீகச் சான்றோரின் (ஸ்ரீ அன்னையின்) அருள்வாக்கு என்று கூறிய செய்தி நினைவுக்கு வருகிறது. அதாவது:-

*"நாம் குழந்தையிடம் வளர்க்க வேண்டிய பண்பு ஒன்றுள்ளது. இளமையிலேயே அதை ஊட்டிவிட வேண்டும். அதாவது ஓர் அசௌகரிய உணர்ச்சி, ஒரு தார்மீக சஞ்சலம் அதன் உள்ளத்தில் ஏற்படுமாறு செய்ய வேண்டும். ஒரு வகையில் இதை ஒரு குற்றவுணர்ச்சி என்றே சொல்லலாம். நமது கண்டனத்திற்கோ,*

*அல்லது தண்டனைக்கோ அஞ்சி ஏற்படுவதாக அது இருக்கக் கூடாது. இயல்பாகவே தோன்ற வேண்டிய ஓருணர்ச்சி அது. தனது தோழன் ஒருவனைக் காரணமின்றி அடித்துவிட்டால் பின்னர் அவனுக்குக் கழிவிரக்கம் ஏற்பட வேண்டும். தவறுகள் செய்தால், உண்மைக்குப் புறம்பாக எதைச் செய்தாலும் ஓர் உறுத்தல் ஏற்பட வேண்டும். யாரும் சுட்டிக் காட்டாமலேயே அவனாகவே உணர வேண்டும்."*

இந்த அருளுரையின் அடிப்படையிலேதான் ஆர்த்திக்குத் தார்மீக சஞ்சலம் ஏற்பட்டிருப்பதை சுமதியால் உணர முடிந்தது.

'கண்ணே! இவ்வளவு பொறுப்புணர்வுள்ள உன்னைப் பெற்றதற்குக் கடவுளுக்கு நன்றி சொல்கிறேனம்மா!' என்றாள் சுமதி.

சுவாமி பிரசாதத்துடன் உள்ளே வந்த சுபா தாயும் மகளும் இணைந்திருக்கும் இந்த அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தாள்.

'நாளையே என் திரையுலக விலகலை அறிவித்து விடுகிறேன் ஆர்த்தி. தார்மீக சிந்தனையுள்ள என் மகளுக்காக விலகுகிறேன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு வெட்கமில்லை பெருமை தான்' என்கிறாள் சுமதி.

மனதின் சுமை இறங்கியது. இலேசான உணர்வு எழுந்தது ஆர்த்திக்கு. மெல்ல எழுந்து விட்டாள்.

'எழுந்திருக்க வேண்டாம் ஆர்த்தி. உன் உடம்பு குணமாகட்டும்' என்று அவளைப் பிடித்துக் கொண்டாள் சுமதி.

'இனி எனக்கு ஒன்றுமில்லையம்மா. அகத்தின் ஆழத்தில் நிகழும் இனிய இசைபாட்டின் (சுமுகத்தின்) விளக்கமே புறத்தில் நிகழும் ஆரோக்யம் என்று வசந்திம்மா சொன்னாங்க' என்று சோர்வைப் புறக்கணித்து உற்சாகமானாள் ஆர்த்தி.

'பெரியம்மா! உன் பிரார்த்தனை பலித்து விட்டது போதுமா?' என்றாள் அம்மாவை அணைத்துக் கொண்டு.

'கண்படப்போகிறது. என் கண்ணே பட்டுவிடும் போலி-ருக்கிறது' என்று இருவரையும் தொட்டு திருஷ்டி கழித்தாள் சுபா.

'பெரியம்மா! போனை எடுத்து வாருங்கள்' என்றாள்.

போனைக் கொண்டுவந்து பக்கத்து டேபிள்மீது வைத்தாள்.



மெல்ல அம்மாவின்மீது சாய்ந்து கொண்டு டயல் செய்கிறாள்.

'ஹலோ! அம்மாவா! நான் ஆர்த்தி பேசுகிறேன்', என்கிறாள் உற்சாகத்துடன்.

எதிர்ப்பக்கத்தில் (மறுமுனையில்) பேசுபவர் என்ன செய்தி என்று கேட்டிருப்பாள் போலும்.

'நீங்கள் கூறியது உண்மைதான் அம்மா. என்னைப் பெற்றவள், என்னால் வெறுக்கப்பட்டவள் மிகவும் நல்லவள் என்பதை உணர்ந்து விட்டேன். இந்த நல்ல வீணை இனி நலங்கெடாது. அம்மாவுடன் நேரில் வருகிறேன் வசந்திம்மா' என்றாள்.

வசந்தி ஆர்த்தியின் மனத்தெளிவைக் கேட்டு புன்னகைத்தாள்.

'போனில் யாரிடம் பேசினாய்?' என்றாள் சுமதி.

'என் அம்மாவை எனக்குக் காட்டிய தெய்வத்தாயிடம் பேசினேன். அவர்களை நேரில் பார்த்து நன்றி சொல்ல வேண்டுமம்மா' என்றாள் ஆர்த்தி.

'ஆமாம் ஆர்த்தி! நானும் அதைத்தான் நினைத்தேன். அந்தத் தெய்வத்தாயை நான் சந்தித்திராவிட்டால் உன்னை ஈன்றெடுத்-திருப்பேனா? நீ கருவிலேயே கலைந்திருப்பாய்'.

'என்னம்மா சொல்கிறாய்?' என்றாள் ஆர்த்தி.

'ஆமாம் ஆர்த்தி. கருவைக் கலைக்க எண்ணியபோது டாக்டர் தேவி எனக்கு இந்த வசந்தியைத்தான் சந்திக்க ஏற்பாடு செய்திருந்-தாள். அவள் என்னிடம் ஒரு தெய்வீகரின் அருளுரைகளை அடிக்கடி சொல்வாள். அப்படிச் சொன்ன ஓர் அருளுரையின்படிதான் அவளுடன் அந்தச் சூழலில் தங்கினேன்' என்றாள் சுமதி.

'என்ன அருளுரையம்மா அது?' என்றாள் ஆர்த்தி.

'கல்வி என்பது மனிதனுக்கு அவன் பிறந்தவுடனே ஆரம்பித்து வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும்'.

'கல்வியினுடைய முழுப்பயனையும் பெற வேண்டுமானால் பிறப்பதற்கு முன்பிருந்தே அது தொடங்கிவிட வேண்டும். அப்படியெனில் அக்கல்வியின் பொறுப்பு குழந்தையைத் தாங்கும் தாயாரையே சாரும். அவருடைய பணி இரண்டு வகையாக உள்ளது. ஒன்று அவள் (தாய்) தன்னைத்தானே பக்குவப்படுத்திக்

கொள்ள வேண்டும். தன் சுய முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவதாக தான் உருவாக்கும் சிசுவின்மேல் கவனம் வேண்டும். தனது ஆர்வம், விருப்பங்கள் தானிருக்கும் சூழ்நிலை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். தனது எண்ணங்கள் தூய்மையாக, உன்னதமாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். தனது உணர்ச்சிகள் மென்மையாக, மேன்மையாக இருக்கும்படி கவனமாக இருக்க வேண்டும். தனது சூழலில் எப்போதும் அன்பும், இசைவும் (சுமுகமும்) இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். சூழலில் அன்பும், எளிமையும், அழகும் மிளிர வேண்டும். ஒரு தாய் அளிக்கக்கூடிய உயர்ந்த கல்வி இதுதான். இது தவிர அவளுக்கு உன்னத இலட்சியங்கள் இருக்கக் கூடுமாயின், அந்த இலட்சியங்களுக்கேற்பத் தனது மகன் உருவாக வேண்டும் என்ற சங்கல்பம் அவளுக்கு இருக்குமாயின், அந்த மகன் உன்னதச் சிறப்புகளுடன் இவ்வுலகிற்கு வருவான் என்பதில் ஐயமில்லை' என்பதுதான் அந்த அருளுரை. 'அதன்படிதான் உன்னைக் கருவில் தாங்கிய நாட்களில் உன்னதமான சூழலில், உன்னதமான உணர்வுகளுடனிருந்தேன். அதன் விளைவாகத்தான் உன்னத மகளாய் உன்னைப் பெற்றேன்' என்றாள் சுமதி.

அந்த வீட்டின் ஒவ்வொரு இடமும் தனக்குப் பரவசமூட்டியதன் காரணம் புரிந்தது ஆர்த்திக்கு. வசந்திம்மாவைப் பார்த்தவுடன் தனக்கு ஏற்பட்ட அன்புக்கு விடை தெரிந்தது. நல்லதோர் வீணை நலங்கெடக் கூடாது என்ற வசந்திம்மாவின் உணர்வு தனக்குள்ளிருப்பது தெரிந்தது.

'வசந்திம்மா உங்களைப் பார்க்க வேண்டும். நானும் உங்களைப் போல் எனக்குள் உறையும் தெய்வீகத்துடன் தொடர்பு கொண்டு தெய்வீகச் சூழலை உருவாக்கும் வித்தையைக் கற்க வேண்டும்' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள் ஆர்த்தி.

முற்றும்

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# நினைவில் நிற்பது பலிக்கும்

நினைவு என்பது கடந்த காலத்திற்கு நிகழ்காலத்தில் ஜீவனளிப்பது. பொதுவாகக் கவனித்தால் நமக்கு நினைவுள்ளவை தவறாது பலிப்பதையும், பலிக்காதவை நினைவில் அதுபோல் நிற்காததையும் காணலாம். நினைவின் மூலம் சிந்தனை, சிந்தனையின் ஆணி வேர் மௌனம், மௌனத்தின் இருப்பிடம் ஆன்மா, ஆன்மாவின் அசைவற்ற நிலை மௌனம். ஆன்மா அசையும்பொழுது நிலையாக இருக்கும் மௌனம் பெரிய முடிவான பிரம்மத்தின் மௌனம். எனக்கு 8 வருடங்களுக்குமுன் வர வேண்டிய பிரமோஷன் நிரந்தரமாகத் தவறி விட்டது. மனைவி 3 வருஷ காலமாகத் தாய் வீட்டிற்குப் போனவள் வரவில்லை போன்ற கனத்த சிக்கலான பெரிய பிரச்சனை எதுவானாலும் இன்று நினைவில் நின்றால், கசப்பின்றி, கருத்தின் தெளிவில் கனத்து, சிக்கலிழந்து சிறப்பாக நின்றால், அந்த நினைவுக்கு எந்த கருத்தையும் முழுமையாக்கும் திறனுண்டு. அன்னை அன்பர்கள் அதைச் செய்தால் மேலும் ஓர் விசேஷமுண்டு. அது பூர்த்தி பெறும்பொழுது புது மெருகு பெறும். 8 வருடங்களுக்குமுன் வர வேண்டிய பிரமோஷன் முடிவானதெனில், இப்பொழுது வந்து மேலும் இதுவரை சட்டத்திலில்லாத புது உயர்வு தரும்.

நினைவு நெகிழ்ந்த நினைவானால்
உலகம் உவந்து உன்னை ஏற்கும்.

○✧○

# காணாமற்போன பொருள்

ஒரு பொருள் காணாமற்போனால் பலரும் தேடும் பொழுது ஒவ்வொருவரும் அது என் கையில் கிடைக்க வேண்டும் என நினைக்கிறார்கள். அது பொதுவாகக் கிடைப்பதில்லை. கிடைத்தால் அப்படி நினைக்காதவர் கையில் கிடைக்கும். பொருள் கிடைக்க வேண்டும் என்பது முக்கியமானால், சமர்ப்பணம் பொருளைக் கொண்டு வந்து கொடுக்கும். அதைவிட எது முக்கியம்? பொருளுக்கும், நமக்கும் இன்றுள்ள தொடர்பு பயன். பயன்படும் பொருள்களை நாம் வைத்திருக்கிறோம். அது உடல் உணர்வு (Physical), அடுத்த நிலை (Vital) உணர்ச்சிபூர்வமான உறவு. அப்பொருள்மீது நமக்குள்ள ஆசை, அக்கரை, அடுத்த கட்டம் (Mental) மனம் அறிவது, அப்பொருளைப் பற்றிய நம் அறிவு, முடிவான கட்டம் ஆன்மா. பொருளுக்கு ஜீவன் உண்டு. நமக்கும் ஜீவன் உண்டு. இரு ஜீவன்கட்குள்ள தொடர்பு ஜீவனுள்ள தொடர்பு. அது அறுந்த நேரம் பொருள் தொலைகிறது.

பொருளோடு ஜீவனுள்ள தொடர்பை
மீண்டும் பெற வேண்டும் என ஜீவனுள்ள நினைவு
செயல்பட்டால், தொலைந்து எவ்வளவு நாளாகிறது
என்பது பிரச்சனையில்லை.
பொருளின் ஜீவன் உயிர் பெற்று தேடும்.
ஜீவனை ஜீவனோடு நாடி வரும்.

○✧○